Registered No. M-4483

Madras War Review { TAMIL 3-12-1943

யுத்த சஞ்சிகை

மலர் IV — 1943-ம் ஆண்டு டிசம்பர் மீ 3உ, வெள்ளிக்கிழமை — இதழ் 14

பிரிட்டிஷ் விமானப் படை ஜப்பானை நொறுக்கும்

நொறுக்கப்பட வேண்டியவற்றின் ஜாபிதாவில், முதல் ஸ்தானம் ஜெர்மனிக்குத் தான். உலகப் படத்தி லிருந்து ஜெர்மனி அழிந்த பிறகு, நம் மூல பலங்களை யெல்லாம் பெருக்கிக் கொண்டு, ஜப்பானைத் தாக்கலாம். நாம் இப்போது ஜெர்மனியை என்ன செய்து கொண் டிருக்கிறோமோ, என்ன செய்யப் போகிறோமோ, அதை விட அதிக மாகவே ஜப்பானையும் செய்வோம்.

இவ்வளவு கடுமையான தண்டனை தமக்குக் கிடைத்ததைக் கண்டு, மேலும் கடுமையாகப் பாதுகாப்பு யுத்தம் ஜெர்மானியர்கள் நடத்தக் கூடும். ஜெர்மானியர்கள் புதிய ஆயுதங்களை வைத்திருக்க மாட்டார்கள் என்று நினைப்பதற்கு மில்லை. அதனால், தற்காலீக அசௌகரியங்கள் சில ஏற்படலாம். ஆனால், நாளடைவில், ஜெர்மானியர்கள் தப்பிக் கவோ, மீளவோ இடமில்லை. இன்றுள்ள நிலைமையில், ஜெர்மனியின் கதி இது தான். ஒரு நாள் ஜப்பானும் இதே கதிக்குத் தான் வரப் போகிறது.

அந்தக் காலம் வருகிற போது, ஜப்பானுக்கு அது மேலும் பாதக மானதா யிருக்கும். எப்படி யென்றால், அமெரிக்காவும் பிரிட்டனும் தம் படைகளை யெல்லாம் திரட்டி ஜப்பானைத் தாக்கக் கூடும். இது, மகத்தான விமான பலத்தை மட்டும் கொண்டல்ல. ஜெர்மனியைத் தாக்கியதனால் தாமடைந்த அனுபவத்தைக் கொண்டு மேலும் கடுமை யாகத் தாக்கலாம்.

நான் பிரிட்டிஷ் விமானப் படை அனைத்தின் சார்பாகவும் தான் பேசுகிறே னென்று எனக்குத் தெரியும். இது வரை கற்ற பாடங்களை டோக்கியோவிடம் ஒப்பிப்பதற்கு நம் அமெரிக்கத் தோழர்களோடு நாம் என்று ஒன்று சேருவோ மென்று மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

—ஏர் மார்ஷல் சர் வில்லியம் வெல்ஷ், அமெரிக்காவிற்குப் போன விமானத் தூதுக் கோஷ்டித் தலைவர் நவம்பர் 29-ம் தேதி கூறியது.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
பிரிட்டிஷ் விமானப் படை ஜப்பானை நொறுக்கும்	1	படம்: தேசீயப் போர் முனைப் பாடகர்கள் மறு பயிற்சி	7
முரசொலி	2	பற்றுகிறது	8
விடுதலை	2	நாமும் யுத்தமும்	9
தலையங்கம்: பெர்ல் துறைமுகம்	3	இந்திய விமானப் படையின் புகழ் ..	11
போர்முனை நிகழ்ச்சி விளக்கம்	4	அரசாங்க அச்சுக்கூட யுத்தப் பகுதி ..	11
இந்தியப் படைகளின் வீரச் செயல்கள் ..	5	யுத்தநாட் குறிப்புக்கள்	12
நேசர்களைப் பெருமையுடன் வெறுக்கும் ஜப்பானியர்	6		

முரசொலி

"என் இந்தியக் குடிகளில் பலருக்கு யுத்தத்தினுல் கடுமையான துன்பங்கள் சமீபத்தில் ஏற்பட்டன. அவை விரைவில் நீங்கு மென்று நம்புகிறேன். எமது அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளால், இந்திய அரசாங்கம் உதவி பெற்று, அங்கே சில பகுதிகளிலுள்ள கோரமான உணவுப் பஞ்சத்தை நீக்கும்."

"தூரக் கிழக்குப் போர் முனையில், எதிரிகள் முன்னேற முடியாதபடி தடுக்கப் பட்டனர். நேச நாட்டுப் படைகள் தாக்க ஆரம்பித்து விட்டன. இதனுல் நம் சீனத் தோழர்களுக்குக் கொஞ்சம் சௌகரியம் ஏற்படலாம். அவர்கள் நெடுங்காலமாக ஜப்பானியர்களோடு போராடிக் கொண்டிருக்கிருர்கள். அவர்களிடம் நாம் பெரிதும் அனுதாபங் கொள்ளுகிறோம்."

"தென் கிழக்கு ஆசியாவில் புதிய படைத் தலைவர்களை நியமித் திருக்கிறோம். மேலப் பசிபிக் சமுத்திரத்திலுள்ள சில தீவுகள் மீண்டும் சுயாட்சி நாடுகளாகி விட்டன. இதை, முன்பு, எதிரிகள் தாக்கிப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். என் குடிகள் அனைவருக்கும் சமாதானத்தையும் முன்னேற்றத்தையும் வழங்கத் தக்க தோர் நிலைமை, கடவுள் அருளால், மீண்டும் ஏற்படும் நாளை, ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

—மன்னர் பிரான், பார்லிமெண்ட் சபையை ஆரம்பித்து வைத்து நவம்பர் 23-ம் தேதி செய்த பிரசங்கம்.

* * * * * *

"உலகம் முழுவதையும் விடுவிக்கும் நோக்கத்தோடு நாம் போராடிக் கொண்டிருக்கும் இந்த வருஷத்தில், கடவுள் நமக்குப் பெரும் உதவி செய்திருக்கிருர். பிற நாட்டுப் படையினருடன் நம் நாட்டு வீரர்களும் சகோதர பாவங் கொண்டு வெற்றிகள் பெற்ருர்கள். நம் நாட்டை விடுவித்தார்கள். அச்சத்தை அகற்றினர்கள். கொடுமையைக் குலைத்தார்கள். உலகம் எதேச்சையாக வாழ்வதற்கான அஸ்திவாரத்தைப் போட்டார்கள்."

"யுத்தத்தை விரைவில் முடிக்க வேண்டி, நாம் ஒவ்வொருவரும் நம்மால் இயன்ற வரை முயற்சிக்க வேண்டு மென்று கங்கணங் கட்டிக் கொள்ள வேண்டும். அப்போது தான், உலக மக்கள் சமாதானத் தோடும் சகோதரத்துவத் தோடும் வாழ புதிய சந்தர்ப்ப மேற்படும்."

—மிஸ்டர் ரூஸ்வெல்ட், நன்றியறிதல் நாளன்று, நவம்பர் 25-ம் தேதி செய்த பிரகடனம்.

* * * * * *

"தடக்க முடியாது எனத் தக்க நிலைமையில், 8-ம் படை இப்போது முன்னேறிக் கொண்டிருக்கிறது."

—ஜெனரல் மண்ட்காமரி நவம்பர் 25-ம் தேதி கூறியது.

* * * * * *

"ரோமாபுரிக்கு வடக்கே ஜெர்மானியர்களை விரட்ட வேண்டிய காலம் வந்து விட்டது."

—ஜெனரல் மண்ட்காமரி நவம்பர் 28-ம் தேதி கூறியது.

தமிழ்ப் பெருமக்களே!

"விடுதலை"

உங்களுடைய பத்திரிகையே!!

எனென்ருல், இது சரியான முறையில் உள்ள பத்திரிகையாகும்.

ராய்ட்டர், அசோசியேட் பிரஸ் தந்திச் செய்திகளை வாசகர்களுக்கு இப்பத்திரிகை அப்படியே தருகிறது.

குறிப்பாகத் தமிழ் நாட்டின் நன்மைக்கு வேண்டிய அகில இந்தியச் செய்திகளை யெல்லாம் வெளியிடுகிறது.

இது எந்த ஒரு குறிப்பிட்ட பகுதியாருடைய கருத்தை மட்டும் வெளியிடும் பத்திரிகை யல்ல.

நமது கீழ்த் திசையில் யுத்த மேகம் பரவிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவின் நலன்களும் உங்களுடைய தனிப்பட்ட நலன்களும் பாதிக்கப்படலாம்.

எனவே, அன்ருட நிகழ்ச்சிகளை அப்போதைக்கப்போது உங்கள் நன்மையை நாடி அறிவித்துக் கொண்டிருக்கும் தொண்டை, "விடுதலை"ப் பத்திரிகை செய்துவரும்.

"விடுதலை" படியுங்கள்.

வருடச் சந்தா: (தபால் மூலம்) ரூ. 24-0-0. சென்னைக்கு ரூ. 20-0-0.
மாத சந்தா: ,, ரூ. 2-2-0. சென்னைக்கு ரூ. 1-12-0.
தபாற் பெட்டி நெம்பர் 325.

மானேஜர்,
"விடுதலை"
சிந்தாதரிப்பேட்டை, சென்னை.

Registered No. M-4483.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1943-௵ டிசம்பர்௴ 3உ, வெள்ளிக்கிழமை | இதழ் 14

பெர்ல் துறைமுகம்

பெர்ல் துறை முகத்தை ஜப்பானியர்கள் அயோக்கியத் தனமாகத் தாக்கி இரண்டு வருஷங்களாகப் போகின்றன. 1941-ம் வருஷம் டிசம்பர் மாதம் 7-ம் தேதி காலையில் ஜப்பானியர் அதைத் தாக்கினார்கள். அது அமெரிக்கர்களுக்குச் சொந்தம். அது போலவே, மிட்வே, குவாம், வேக் ஆகியவையும் சொந்தம். இவை பற்றி ஒரு ஒப்பந்தம் பேசுவதாகக் கூறிக் கொண்டு 2 ஜப்பானிய தூதர்கள் வாஷிங்டனுக்குப் போனார்கள். அவர்கள் அங்கே அமெரிக்க அரசாங்கத் தோடு தூது பேசிக் கொண்டிருக்கும் போதே, இந்தத் தீவுகளை யெல்லாம் ஒரே சமயத்தில் ஜப்பானியர்கள் தாக்கினார்கள். இது முழு அயோக்கியத் தன மல்லவா? இந்தத் தீவுகளெல்லாம் சிதறிக் கிடக்கின்றன. ஆகையால் முன்னேற்பாட்டோடு தான் ஜப்பான் படைகள் ஏககாலத்தில் தாக்கி யிருக்க வேண்டும். இது பற்றி கொஞ்சமும் சந்தேகமில்லை. தம்மோடு சமரசம் பேச வந்திருக்கிறவர்கள், இப்படி அயோக்கியத் தனமாக நடந்து கொள்ளுவார்களென்று, அமெரிக்கர்கள் கொஞ்சமும் சந்தேகித்தவர்க ளல்ல.

இந்தத் தூதர்களில் ஒருவரான சாப்ரோ குருசு வாஷிங்டனுக்குக் கிளம்ப இரண்டு நாட்களுக்கு முன்பு, 'ஜப்பான் டைம்ஸ் அண்ட் அட்வெர்டைசர்' என்னும் பத்திரிகை கீழ்க் கண்டவாறு எழுதி யிருந்தது :—

ஜப்பானியர் விதிக்கும் கீழ்க் கண்ட நிபந்தனைகளை அமெரிக்கா ஒப்புக் கொள்ள வேண்டும்; இல்லாவிட்டால் அதன் பலாபலனை அது அனுபவிக்க வேண்டி வரும் :—

(1) சுங்கிங்குக்கு அனுப்பப்படும் எல்லாப் பொருளாதார உதவிகளும் நிறுத்தப்பட வேண்டும்.

(2) ஜப்பானோடு போராடும்படி சீனாவை சுயேச்சையாக விட்டுவிட வேண்டும். ஜப்பானோடு சமரசம் செய்து கொள்ளும்படி, சீனாவுக்கு ஆலோசனை கூறப்பட வேண்டும்.

(3) இராணுவத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் ஜப்பானைச் சிக்க வைக்கக் கூடாது.

(4) ஜப்பான் "கூட்டு முன்னேற்றத் திட்டம்" அங்கீகரிக்கப்பட வேண்டும். மஞ்சுகோ, சீனா, இந்தோ சீனா, தாய்லந்து, நெதர்லந்து இந்தீஸ் முதலிய நாடுகளும், பாதுகாப்பிற்குட்பட்டிருக்கும் நாடுகளும் ஜப்பானோடு தம் சொந்த முறையில் அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் சம்பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்ளும்படி அனுமதிக்கப்பட வேண்டும். எந்த வகைத் தடையும் இவற்றிற்கு ஏற்படக் கூடாது.

(5) மஞ்சுகோவை அங்கீகரிக்க வேண்டும். அங்கு என்ன செய்யப்பட்டிருந்தாலும், அது அழிக்கப்பட மாட்டாது.

(6) ஜப்பானியர்களுக்கும் சீனர்களுக்கும் உள்ள சொத்துக்களைச் சுருக்குவது, எவ்வித நிபந்தனையுமின்றி ஒழிய வேண்டும்.

(7) வியாபார ஒப்பந்தங்கள் மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும். கப்பல் ஏற்றுமதிக்கும் வியாபாரத்திற்கும் விதிக்கப்பட்டிருக்கும் தடைகள் நீங்க வேண்டும்.

இந்த நிபந்தனைகளைப் பரிசீலனை செய்த அமெரிக்க அரசாங்கத்தார் ஒரு அறிக்கையை ஜப்பானிய அரசாங்கத் தூதருக்குக் கொடுத்தார்கள். அந்த அறிக்கையின் 3, 4 பாராக்களில் கீழ்க் கண்டவாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது :—

"சீனாவிலிருந்தும், இந்தோ சீனாவிலிருந்தும் தம் எல்லா இராணுவங்களையும், கப்பற் படைகளையும், விமானப் படைகளையும், போலீஸ் படைகளையும் ஜப்பான் அரசாங்கம் வாப்பீஸ் செய்து கொள்ள வேண்டும்."

"இராணுவத் துறையிலும், அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், தற்காலிகத் தலை நகரமாக சுங்கிங்கைக் கொண்டுள்ள சீனா தேசியக் குடியாட்சியைத் தவிர, வேறெந்த அரசாங்கத்திற்கும் அமெரிக்க அரசாங்கமும் ஜப்பான் அரசாங்கமும் ஆதரவளிக்காது."

ஆரம்பத்திலிருந்து, அடிப்படையான பிரச்சினை சீனாவைப் பற்றியது தான் என்பது தெளிவாகத் தெரிகிறது. டிசம்பர் மாதம் 2-ம் தேதி இந்தோ சீனாவைப் பற்றி விவாதிக்கப்பட்டது. இந்தோ சீனாவிற்குள் ஜப்பானியத் துருப்புக்களும் யுத்தக் கப்பல்களும் தளவாடங்களும் வெகு அதிகமாக வந்து சேருவதாகவும், அமெரிக்க அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்தது. இவை ஏன் அங்கே வந்து நிறைகின்றன வென்று ஜப்பானிய அரசாங்கத்தைக் கேட்ட போது, 'அமெரிக்கப் பிரச்சினை பற்றி எம் அரசாங்கம் நன்கு ஆலோசிக்கும் என்று ஜப்பான் தூதருள் ஒருவரான அட்மிரல் நுமூரா கூறினார். நவம்பர் மாதம் 26-ம் தேதி அமெரிக்கா கொடுத்த பதில் அறிக்கையின் பலன் தான், டிசம்பர் மாதம் 7-ம் தேதி, பெர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்கியது. ஆனால் இந்த அறிக்கைக்கு பதில் அதே சமயத்தில் அமெரிக்க மந்திரியான கார்டல் ஹல் வசம், ஜப்பானியத் தூதர் கொடுத்தார். தாம் மிஸ்டர் கார்டல் ஹல்லை, டிசம்பர் மாதம் 7-ம் தேதி பகல் 1-45 மணிக்குக் காணுவதாகத் தெரிவித்து, 2-05 மணிக்கு அவருடைய காரியாலயத்திற்கு ஜப்பானிய தூதர்கள் வந்தார்கள். 2-20 மணிக்கு அவர்களை அவர் வரவேற்றார். அதாவது பெர்ல் துறைமுகம் தாக்கப்பட்டு 1-மணி நேரத்திற்குப் பிறகு தான், தம் சமரசப் பேச்சு முறிந்து விட்டதாக அவர்கள் கடித மூலமாக அறிவித்தார்கள். அப்போது ஜப்பானிய தூதர்களிடம் மிஸ்டர் கார்டல் ஹல் கூறியதாவது :—

"சென்ற 9 மாதங்களாக நான் உங்களோடு பேசிக் கொண்டிருந்ததில், ஒரு பொய் கூடச் சொன்னதே கிடையாது. இதற்கு நம் தஸ்தாவேஜிகளே சாட்சி. சென்ற 50 வருஷங்களாகப் பொது சேவையில் நான் ஈடுபட்டிருக்கிறேன். இப்போது எனக்கு அனுப்பி யிருக்கப்படும் தஸ்தாவேஜிகளைப் போல பொய்யும் புனைசுருட்டும் நிறைந்ததோர் தஸ்தாவேஜை ஒரு போதும் நான் கண்டதே கிடையாது. இவ்வளவு பெரும் பொய்களைக் கூறக் கூடிய அரசாங்க மொன்று இப்பூமண்டலத்திலே இருக்கக் கூடுமென்று நான் கனவிலும் நினைத்தவ னல்ல."

ஜப்பானின் பித்தலாட்டத்திற்கு எடுத்துக் காட்டாக வுள்ள இந்தச் சம்பவங்கள், இரண்டு வருஷங்களுக்குப் பிறகு நமது ஞாபகத்திற்கு வருகின்றன. பசிபிக் மகா சமுத்திரத்தில் அமெரிக்கக் கப்பற் படையை இடுப்பொடிக்கத் தக்க முறையில், ஜப்பான் 1941 ௵ டிசம்பர் மாதம் 7-ம் தேதி தாக்கினது. இப்போது 1943-ம் வருஷம் டிசம்பர் மாதம் 7-ம் தேதியை யடுத்து, நேச நாடுகள் தம் விமான பலத்தாலும் கப்பற் படை பலத்தாலும் தலை நிமிர்ந்து நிற்கின்றன. அப்போது அமெரிக்காவின் ஆசிய கப்பற் படையின் படைத் தலைவராயிருந்த அட்மிரல் ஹாரி இ. யார்னெல் இப்போது, கடற்படைப் போராட்டத் தலைவர் காரியாலயத்திலிருக்கிறார். இந்த இரண்டாவது ஆண்டு நின்றவை முன்னிட்டு அவர் அது சம்பந்தமாக விசேஷக் குறிப்புகள் எழுதியிருக்கிறார். அதாவது :—

"பசிபிக்கில் இப்போது நேச நாடுகள் தாக்க ஆரம்பித்து விட்டன. இங்கே பரந்த நாடுகளையும் பல பகுதிகளையும் ஜப்பான் கைப்பற்றி யிருக்கிறது. இப்போது அவற்றைக் காப்பாற்றுவது ஜப்பானுக்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது. ஜப்பான் கைப்பற்றிய பரந்த நாடுகளின் எல்லைப் புறத்தில், தகுந்தபடி அடிபட்ட ஜப்பான் எப்போதும்

ஆயத்தமாக இருக்க வேண்டும். ஜப்பானியப் படைகள் பல விடங்களுக்கும் சிதறிப் போக வேண்டும். ஆனால் எப்போது வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும் நேசதேசப் படைகளெல்லாம் திரண்டு, ஜப்பானைத் தாக்கக் கூடும்.''

என்றாலும், ஜப்பானை வெல்லுவது அவ்வளவு எளிதான காரியமல்ல. பூகோள ரீதிப்படிப் பார்த்தால் ஜப்பான் பலமான நிலைமையி லிருக்கிற தென்றும், அதற்கு வெளியேயுள்ள அதன் தீவுகள் நன்றாக அரண் செய்யப்பட்டிருக்கின்றன வென்றும், அட்மிரல் யார்னேல் குறிப்பிடுகிறார். உள் நாட்டில் போக்கு வரவு சாதனங்கள் நன்கு அமைந்திருக்கின்றன. ஆகையால், உதவிப் படைகளை வெகு விரைவில் ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்பலாம். ஜெர்மனியை யொழித்த பிறகு, நேச நாட்டுப் படைகளெல்லாம் சேர்ந்து, ஜப்பானைத் தாக்கும். அப்படிப்பட்ட சமயம் கட்டாயம் வரத் தான் போகிறது. இது வரை பட்டிராத பாடு, சுயேச்சையை நாடும் நாடுகளிடம், ஜப்பான் படப் போகிறது. அதனால் ஜப்பானுக்குப் பெரும் வீழ்ச்சி யுண்டாகும். கீழக்கோடி நாடுகளில் அதன் அக்கிரமமும் ஒடுங்கிப் போகும்.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

கோமலில் சோவியத் வெற்றி.

வெள்ளை ரஷ்யாவிலுள்ள பலமான அரண்களில் கோமலும் ஒன்று. இது, பழைய போலந்தின் எல்லைப் புரத்திற்குப் போகும் பாதையி லிருக்கிறது. இதை சோவியத் படைகள் கைப்பற்றிக் கொண்டன. சோவியத் படைகள் அடைந்த பல முக்கியமான வெற்றிகளில் இதுவும் ஒன்று. இந்த நகரம் 1941-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் மத்தியி லிருந்து ஜெர்மானியர் வசமிருந்து வந்தது. அந்தப் பகுதியிலேயே அது ஒரு முக்கியமான நகரம். இங்கே கைத்தொழில்கள் அதிகம். பல இரசாயன சாலைகள் உண்டு. ஒரு பெரிய தீப்பெட்டி உற்பத்திச் சாலையும் அங்கே யிரு கிறது. ரஷ்யாவில் உள்ள கண்ணாடித் தகடுகள் உற்பத்திச் சாலைகளில் மிகப் பெரிதும் இங்கே தான் இருக்கிறது. இது ஒரு முக்கியமான 'ரயில்வே ஜங்ஷன்'. போலந்துக்குப் போகும் இரண்டு ரயில்வேக்கள் இங்கே சந்திக்கின்றன. ஒன்று மேற்கே ப்ரெஸ்ட்-லெடோப்ஸ்க்கை நோக்கிப் போகிறது. மற்றொன்று வடக்கு நோக்கி மின்ஸ்க் வழியாக வில்னாவிற்குப் போய், அங்கிருந்து லுதுவேனியாவிற்குப் போகிறது. கோமெலுக்குச் சில மைல்களுக்கு அப்பால் தான் லெனின் கிராட்-வி டப்ஸ்க்-ஷிடோமீர்-ஒடெசாவுக்குப் போகும் பெரிய 'ரயில்வே லைன்' இருக்கிறது.

ஜெர்மானியர்களின் படைகளில் ஒரு பகுதி 'ஒய்ட் ரஷ்யா'வில் பான் க்ளூக் தலைமையி லிருக்கிறது. மற்றொரு பகுதி உக்ரேனில் பான் மென்ஸ்டீன் தலைமையி லிருக்கிறது. கோமல் நகரத்தைச் சோவியத் படைகள் கைப்பற்றிவிட்ட படியால், இந்த இரண்டு படைகளும் அடியோடு துண்டிக்கப் பட்டு விட்டன. ஜெர்மானியர்கள் எதிர்பாராத விதமாக, கோமலுக்கு வடக்கே சோவியத் படைகள் 'ஒய்ட் ரஷ்யா'வைத் திடீரென்று தாக்க ஆரம்பித்தன. படிப்படியாக சோவியத் படைகள் முன்னேறிக் கொண்டிருககின்றன. 'ஒயிட் ரஷ்ய'ப் படையைச் சேர்ந்த மோட்டார் படைகள், ஜெர்மன் அரண்களைத் துளைத்ததனால், மொகிலேபுக்கும் கோமலுக்குமிடையே பின்வாங்கிக் கொண்டோடும் ஜெர்மன் படைகளை விரட்டிக் கொண்டு 30 மைல் இடைவழி மூலம், மகா வேகமாக, முன்னேறிக் கொண்டிருக்கின்றன. குளிர் காலத்தில் தாம் தங்கியிருப்பதற்கு ஏற்றபடி ஜெர்மன் பான் க்ளூக்கின் படைகள் பாதுகாப்பிடங்கள் வெட்டிக் கொண்டு அங்கே பதுங்கிக் கொண்டிருந்தார்கள். அடக்கமாகவும், உஷ்ணமாகவும், எல்லா வகைத் தளவாடங்களுடனும் அந்தப் படையினர் அங்கே யிருந்தனர். அவர்களை சோவியத் படைகள் சதுப்பு நிலங்களுக்குள்ளாகவும் காடுகளுக்குள்ளாகவும் விரட்டி யடிக்கின்றன. அங்கே அவர்களைத் தகுந்தபடி விசாரித்துக் கொள்ள, சோவியத் கொரில்லாப் படைகள் இருக்கின்றன. ஆகவே, ஏற்ற சமயத்தில் சோவியத் படைகள் தாக்கியதன் பயனாக, ஹிட்லருடைய மழை காலப் போர்த் திட்டம் குலைந்தது.

கொரஸ்டெனும் ஷிடோமீரும்.

மிகவும் முக்கியமான கியெப் போர் முனையில், ஜெர்மன் படைத் தலைவரான ஜெனரல் பான் மென்ஸ்டீன் டினீப்பர் வளைவின் தென் பகுதியைத் தான் தாக்குவதன் மூலம், தன் நிலைமையைக் காப்பாற்றிக்கொள்ளக் கூடுமென்று நம்பிக் கொண்டிருக்கிறார். ஆகவே தான், தன் படைகளை அதிகப்படுத்தி பரந்த பகுதிகளில் நிறுத்தி வைத்திருக்கிறார். வடக்கே வெகு தூரத்திலுள்ள கொரெஸ்டனுக் கருகில் புகுந்தடித்துக் கொண்டு உட்புக வேண்டு மென்று விரும்புகிறார். மேற்கு உக்ரேன் பகுதியில் முக்கியமான ரயில்வே ஜங்ஷன்களில் இதுவும் ஒன்று. கியெபுக்கு வடமேற்கே ஏறக்குறைய 100 மைல்களுக்கு அப்பால் இது இருக்கிறது.

இந்தக் கட்டத்தில், சோவியத் படைகளும் ரஷ்யப் படைகளும் ஒன்றை யொன்று மாறி மாறி தாக்கிக் கொள்ளுவது பற்றி ஆராய்ச்சி செய்வது பொருத்தமாகும். கொரெஸ்டெனிலும் அதற்கு வடக்கே 150 மைல்களுக்கு அப்பாலுள்ள ரெச்சிஸ்டாவிலும் ஜெர்மானியர் தோல்வியடைந்தார்கள். ஆனால், அதற்கு 6 நாட்களுக்கு முன்பு, தம்மிடமிருந்து ரஷ்யர்கள் கைப்பற்றிய ஷிடோமீரை மீண்டும் ஜெர்மானியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். சோவியத் படைகள் கொரெஸ்டனையும் ரெச்சிஸ்டாவையும் கைப்பற்றியதனால் தான், கோமலுக்குப் போக வழி ஏற்பட்டது. ரஷ்யப் படைகள் ஷிடோமீரைக் காலி செய்து கொண்டிருக்கும் போதே, தெற்கே நிகோபோலை நோக்கி ரஷ்யப் படைகள் முன்னேறிக் கொண்டிருந்தன. செர்க்காசிக்கு அருகில் டினீப்பர் ஆற்றை மீண்டும் கடக்க ஆரம்பித்தன.

ஷிடோமீரில் ஜெர்மானியர்கள் ஏன் எதிர்த் தாக்குதலை ஆரம்பித்தார்கள்? டினீப்பர், பக் என்னும் ஆறுகளின் வழியாக ரஷ்யப் படைகள் முன்னேறிக் கொண்டுபோனால், தமக்குப் பேராபத்து ஏற்படுமென்று அஞ்சித் தான் எதிர்த்துத் தாக்கின. ரஷ்யப் படைகள் அவ்வழியாக முன்னேறிக் கொண்டு வருவார்களானால், டினீப்பர் வளைவிலுள்ள $1\frac{1}{2}$ லட்சம் ஜெர்மன் படைகளுக்கும் ஆபத்துண்டாகலாம். நிற்க, டினீப்பர் வளைவிக்கு சப்ளைகள்கொண்டு போகும் முக்கியமான ரயில்வே சப்ளை லைனிலுள்ள பெரியதோர் ரயில்வே ஜங்ஷன் பெர்டிசேப். ஷிடோமீரிலிருந்து இந்த ஊருக்கு ரஷ்யப் படைகள் புகுந்து வந்து விடாதபடி தடுக்க, ஜெனரல் பான் மென்ஸ்டீன் பெரியதோர் இருப்புப் படையைக் கொண்டு வந்து திரட்டி வைத்திருந்தது இயற்கை தான். சோவியத் படைகளுக்குப் பின்புரத்தில் ஷிடோமீருக்கு இடையில் கியெப்புக்குப் போகும் பெருவழி மட்டுந் தான் இருந்தது. இதற்குத் தெற்கே 20 மைல் தூரத்தில் உள்ள ஜெர்மன் பெரும்படை, இந்தப் பெருவழியை வெட்டி விட்டது. ஆகவே, ஷிடோமீரைக் காலி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ரஷ்யர்களுக்கு ஏற்பட்டது.

ரஷ்யர் போர்த் தந்திரம்: போக்குக் காட்டித் தாக்கும் முறை.

ரஷ்யர்கள் அடுத்தடுத்துத் தாக்குவதி லிருந்தும், எதிர்த்துத் தாக்குவதி லிருந்தும், ரஷ்யர் போர்த் தந்திர முறை வெளியாகிறது. ரஷ்யாவின் ஒரு பகுதியில் கடுமையான எதிர்ப்பு ஏற்படுமானால், மற்றொரு பகுதியில் தாக்குகிறார்கள். அதன் மூலம் ஜெர்மானியர்களின் கவனத்தைச் சிதறடிக்கிறார்கள். உதாரணமாக, டினீப்பரிலுள்ள தம் படைகளை வடக்கே பெரிடிசேபிலிருந்து ரஷ்யப் படைகள் முன்னேறி வந்து, டினீப்பரிலுள்ள தம் படைகளைத் தாக்காது ஜெர்மானியர் தடுத்து விட்டார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் பெரும் போர் ஒன்று நடத்தும் பொருட்டு, தெற்கே, நிகோபோல், செர்க்காசி ஆகிய இடங்களிலிருந்து பெரும் போராட்டத்தை ஆரம்பித்தார்கள்.

நிகோபோலை ரஷ்யர்கள் தாக்கிப் பெரும் போரை ரஷ்யர்கள் நடத்தியதற்கு மற்றொரு காரணமு முண்டு. இங்கே மங்கனீஸ் சுரங்கங்களிருக்கின்றன. இவற்றில் விளையும் மங்கனீஸைத் தான் ஜெர்மானியர்கள் பெரும்பாலும் உபயோகிக்கின்றனர்.

கிரிமியாவிற்குப் போகும் பாதையின் வடபகுதியில், ரஷ்யப் படைகள் பெருவாரியாகத் தாக்குவதாக சமீபத்தில் வந்த அறிக்கைகள் கூறுகின்றன. பல திசைகளிலும் போக்குக் காட்டித் தாக்குவது மகா ஆபத்தை உண்டாக்கக் கூடிய போர்த் தந்திரமுறை யென்று தோன்றுகிறது.

இந்தியப் படைகளின் வீரச் செயல்கள்

பல வீரப் பதக்கங்களும் விருதுகளும் பெற்றனர்

இந்திய அரசாங்க சபையில் ராஜா யுவராஜ தத்தா சிங் அவர்கள் கேட்ட கேள்விக்கு இந்தியாவின் பிரதம படைத் தலைவர் பதிலளிக்கும் போது, பல யுத்த அரங்கங்களிலும் இந்தியப் படைகள் சாதித்தவற்றை குறிப்பிட்டிருக்கிறார். மாரெத் அரணை மண்ட்காமரி தாக்கிய போது, புகழ் வாய்ந்த நான்காம் படை எவ்வளவு சிறந்த முறையில் போராடிய தென்று அதில் சொல்லி யிருக்கிறார். ஜெர்மன் படைகளோடும் இத்தாலியப் படைகளோடும் 5-வது, 7-வது இந்திய பிரிகேட்களைச் சேர்ந்த இந்தியா கூர்க்கப் படைகளும் பிரிட்டிஷ் படைகளும் கைகலந்து எவ்வளவு வீரத்தோடு போராடின என்றும் அதில் கூறியிருக்கிறார்.

பிரதம படைத் தலைவர் மேன்மை தங்கிய ஜெனரல் சர் க்ளாட் ஆக்கின்லெக் கூறியதாவது :—

இந்தச் சபை சென்ற முறை கூடிய போது, யுத்தத்தின் போக்கைப் பற்றி நான் ஒரு அறிக்கை விடுத்தேன். அது முதல் நேச நாடுகளின் நோக்கம் மேலும் மேலும் ஈடேறிக் கொண்டு வருகிறது. நமது படைகளும் பல வெற்றிகள் அடைந்திருக்கின்றன. வடாப்பிரிக்காவி லிருந்தும் சிசிலியி லிருந்தும் எதிரிகளை அடியோடு விரட்டி விட்டோம். சாலர்னோ கடற்கரையில் வேரூன்றிக் கொள்ளுவதற்கு, ஆங்கிலோ-அமெரிக்கப் படைகள் கடுமையாகப் போராட வேண்டி யிருந்தது. இப்போது, இத்தாலியின் தென் பகுதியில் வேரூன்றிக் கொண்டு ரோமாபுரியை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

வெற்றி வழி

அது போலவே தான் ஐரோப்பாவின் கிழக்குப் போர் அரங்கத்திலும், நமது ரஷ்யத் தோழர்கள் தலை சிறந்த வெற்றிகள் பெற்றார்கள். தம் மீது படை யெடுத்து வந்த ஜெர்மானியர்களை, டினீப்பர் ஆற்றிற்கு அப்பாலுள்ள உக்ரெய்னுக்குள்ளும், ஒயிட் ரஷ்யாவிற்குள்ளும் விரட்டி விட்டார்கள். ஐரோப்பாவின் கீழ் பகுதியிலும் இத்தாலியிலும் நாஜிகள் அடிமேல் அடி பட்டார்கள். அதனால் அவர்களுக்கு ஏராளமான நஷ்டம். போதாக் குறைக்கு அமெரிக்க விமானப் படையும் பிரிட்டிஷ் விமானப்படையும் பெருவாரி சேதத்தை யுண்டாக்கின. இவற்றால் யுத்தத்தின் போக்கே மாறி விட்டது. இந்தப் போராட்டத்தினால் உண்டாகும் பலன், விரைவில் ஏற்படு மென்று நாம் மன திருப்தி யோடு வாளவிருத்தல் தவறாக முடியும். என்றாலும், ஐரோப்பாவில் நேச நாட்டுப் படைகள் வெற்றிக்கான வழியில் போகத் தலைப்பட்டு விட்டார்கள் என்று சொல்லலாம். அடுத்து, நிச்சயமாக வெற்றி தரக்கூடிய வழியில் இப்போது போய்க் கொண்டிருக்கிறார்கள்.

மத்தியதரைக் கடலில், எதிரிகளில் ஒருவர் கூட இல்லாதபடி விரட்டியாயிற்று. முசோலினியின் ஏரியாக விருந்த மத்தியதரைக் கடல், கன்னிங்ஹாமின் குட்டையாக மாறி விட்டது. இவ்வேலையில் இந்திய கப்பற்படையும் இந்தியப் படைகளும் மிகச்சிறந்த பங்கு கொண்டன. வடாப்பிரிக்காவில் உள்ள துனீசியா, மலைகள் மிகுந்த நாடு. கடைசியாக இங்கே தான் வடாப்பிரிக்காவில் இந்தியப் படைகள் போராடின. அப்போது 4-வது இந்தியப் படையில் 2 பிரிகேட்கள் மட்டுந் தான் இருந்தன. அதாவது 4 இந்தியப் பட்டாளங்களும் 2 பிரிட்டிஷ் பட்டாளங்களும் தான் இருந்தன. இவற்றிற்கு உதவியாக இருந்த படைகளும் நல்ல பயிற்சியுள்ளவை. 8-வது படை அப்போது திரிபோலியை நோக்கிப் போராடிப் போய்க் கொண்டிருந்தது.

நாலாம் படையின் போர்த் திறம்

இந்தப் புகழ் வாய்ந்த இந்தியப் படை போராடத் துடித்துக் கொண்டிருந்தது. ஆகவே, மாரெத் அரணைத் தாக்கும் போராட்டத்தில், ஜெனரல் மண்ட்காமரி, இந்தப் படைக்கு விசேஷமான வேலை கொடுத்தார். 5-வது, 7-வது இந்திய பிரிகேட்களைச் சேர்ந்த இந்தியப் படைகளும், கூர்க்கப் படைகளும், பிரிட்டிஷ் படைகளும், ஜெர்மானியரோடும் இத்தாலியரோடும் கைகலந்து மகா உக்கிரமாகப் போராடின. மத்மதா மலைகளி லிருந்து, துனீசியாவி லுள்ள என்பிடவில்லா என்னும் ஊர் வரை, அவர்கள் ஒவ்வொரு போராட்டத்திலும் வெற்றி பெற்றார்கள் என்ற செய்தி பத்திரிகைகளில் வெளி வந்திருக்கின்றன.

எட்டாம் படை முன்னேறி என்பிடவில்லா வரை போய் விட்டது. அதற்கு வடக்கே, பலமான எதிரிப் படைகள் இருந்தன. அப்போது தனக்கு உதவியாக முதலாவது ஜெனரல் அலெக்சாந்தர் படையை தருவித்தார். முழுமூச்சாக எதிரியைப் புகுந்தடித்து வென்று விட வேண்டும் என்பது தான் அவருடைய நோக்கம். அவருக்கு உதவியாக இரண்டு புகழ் வாய்ந்த டிவிஷன்கள் போயின. இவை ஆரம்ப முதல் அங்கேயே போராடிய படைகள். 1940-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் சிட்டி பரானியிலும், மேற்குப் பாலைவனத்திலும் ஜெனரல் அலெக்சாந்தரின் படைகளோடு சேர்ந்திருந்து இவை போராடியவை. இவை தான் 7-வது ஆர்மர்ட் பிரிட்டிஷ் டிவிஷனும் 4-வது இந்தியன் டிவிஷனும். கடைசி வரை இந்தப் படைகளும் போராடின. இவை தான் ட்யூனிஸ் மீது படை யெடுத்துப் போய், சில நாட்களுக்குள் அந்தத் தலை நகரத்திற்குள் புகுந்தவை.

பான் ஆர்னிம், கைதி

ட்யூனிசைக் கடந்தும் நம் படைகள் சென்றன. வட ஆப்பிரிக்காவில் எதிரிகள் தலை தூக்க முடியாமல் ஒழிந்தனர். எதிரி படைத் தலைவரான ஜெனரல் பான்-ஆர்னிம் தன் தலைமைக்காரியாலயத்துடன், 4-வது இந்திய டிவிஷனையும் கூர்க்கப் படையையும் சேர்ந்த பிரிட்டிஷ் ராயல் சஸ்ஸெக்ஸ் பட்டாளத்திடம் சரண் புகுந்தார். இந்தியப் படைகளும் பிரிட்டிஷ் படைகளும் சேர்ந்து அடைந்த இந்த வெற்றி, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தப் படைகள், ஆப்பிரிக்காவில் நடை பெற்ற போராட்டங்கள் எல்லாவற்றிலும், முக்கியமான பங்கு கொண்டிருந்தன.

அபிசீனியாவிலுள்ள அம்பா அழகியில், 5-வது இந்தியப் படை யிடம் அயோஸ்டா பிரபு சரண் புகுந்தார்.

இந்த 4-வது இந்தியப் படையினர் ஒரு சிறிதும் மனத் தளர்ச்சி யடையாதவர்கள் ; சிறந்த பயிற்சி யுள்ளவர்கள்; ஒப்புயர் வில்லாத போருணர்ச்சியுடையவர்கள் ; இவர்கள் தான் துனீசியாவில் கடைசியாகப் போராடினவர்கள். இந்தப் படையைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கும் சிப்பாய்களுக்கும் மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் 138 விருதுகள் வழங்கினார்கள். இரண்டு அழகிய விக்டோரியா பதக்கங்களும் வழங்கப்பட்டன. 9-வது கூர்க்கப் படையைச் சேர்ந்த சுபேதார் லால்பகதூர் தாபாவும், காலஞ்சென்ற ஹவில்தார் மேஜர் சேனுராமும் தான் இந்தப் பதக்கங்களைப் பெற்றவர்கள். ஆனால், ஹவில்தார் மேஜர் சேனுராம் போர்க் களத்திலேயே கொல்லப்பட்டார். 4/6-வது ராஜ்புடானா துப்பாக்கிப் படையைச் சேர்ந்தவர்களுள் விக்டோரியா பதக்கம் பெற்றவர்களுள் இவர் இரண்டாவது.

மத்தியதரைக் கடலில் இந்தியக் கப்பற்படை

மத்தியதரைக்கடல் போராட்டத்தின் அடுத்த கட்டத்தில், இந்தியக் கப்பற்படையும் கலந்து கொண்டது. சிசிலி தீவின் கடற்கரையில், ஜூலை மாதம் 10-ம் தேதி, நேச நாட்டுப் படைகள் முதன் முதல் இறங்குகிற முக்கியமான சந்தர்ப்பத்தில், இந்திய கப்பற் படையும் அங்கிருந்தது வடாப்பிரிக்க தளங்களி லிருந்து சிசிலியின் துறை முகங்களுக்கு அனுப்பப்பட்டு வந்த ஏராளமான தளவாடங்கள் முதலியவற்றிற்கு இந்தியக் கப்பற் படை துணையாகவும் பாதுகாப்பாகவும் உதவின. அதற்கடுத்த சில வாரங்கள் வரை, தாக்கிக் கொண்டிருந்த நம் படைகளுக்கு, உதவிப் படைகளையும் மற்றும் பல வகைப் பொருட்களையும் வற்றாது உதவிக் கொண்டிருக்கும் மகா கஷ்டமான வேலைகளைச் செய்வதில், பிரிட்டிஷ் கப்பற்படை, அமெரிக்கக் கப்பற்படை, கிரேக்கக் கப்பற் படை, நெதர்லாண்ட் கப்பற்படை ஆகியவற்றோடு இந்தியக் கப்பற் படையும் சேர்ந்து ஒத்துழைத்துக் கொண்டு வந்தது. இந்தக் கடமையை நிறைவேற்றுவதில், இந்தியக் கப்பல் படை, மத்தியதரைக் கடல் படை அதிகாரிகளால் பெரிதும் பாராட்டப்பட்ட தென்று பெரும் மகிழ்ச்சி யோடு கூறுகிறேன். அவற்றின் சிறந்த உதவியைப் பாராட்டி, படைத் தலைவர் அதற்கு நன்றி கூறியிருக்கிறார்.

சிசிலித் தீவிலும் இந்தியப் படைகள் மீண்டும் முன்னணியி லிருந்தன. அமெரிக்கப் படைகளோடும், பிரிட்டிஷ் படைகளோடும், இந்தியப் படைகளும் இந்தியப் பயொனீயர் படைகளும் சேர்ந்திருந்தன. இவை சிசிலி கரைகளில் அமைக்கப்பட்டிருந்த கடற்கரைக் கூடங்களில் வேலை செய்து கொண்டிருந்தன. அப்போது தான் நேச தேசப் படைகள் சிசிலியில் போய் இறங்கிக் கொண்டிருந்தன. ஒரு விஷயம் தெளிவாக உணரப்பட வேண்டும். அதாவது, இந்தப் படைகள் போராடுவது மட்டுமன்றி, மற்ற கடுமையான வேலைகளையும் செய்ய வேண்டி யிருந்தது. இந்தப் படையில், தரைப் படையினரும், கப்பற் படையினரும் விமானப் படையினரும் இருந்தார்கள். அங்கே போர் நடைபெறுகிற போதே, இந்தப் படையினர் மேலும் நேச தேசப் படையினரை இறக்கி, அவர்களைப் பாதுகாக்க வேண்டும். ஆகவே, இந்தக் கடற்கரைப் படைக் கூட்டங்களில் எல்லா வகைப் படையினரு மிருந்தார்கள்—பிரிட்டிஷ் படைகள், இந்தியப் படைகள், காலாட்படைகள், பீரங்கிப்படைகள், 'சாப்பர்' படைகள், 'சிக்னல்' படைகள், சப்ளைப் படைகள், போக்கு வரவுப் படைகள், தளவாடப் படைகள் முதலியவை யிருந்தன. அன்றியும் படைகள் விரைவில் கரையில் இறங்குவதற்குத் தேவையான எல்லாப் புதுவகை இயந்திரத் தளவாட சாதனங்களு மிருந்தன.

சிசிலிக் கரையில்

கரையில் இருந்த நேச தேசப் படைகள் அலைகள் போல் ஒன்றன் பின் ஒன்றாக எதிரிகளைத் தாக்கி, கரையி லிருந்து விரட்டின. பிறகு இந்தக் கரைப் படைக் கூட்டங்கள் கரையை யடுத்த பிரதேசங்களில் தங்கின. தாக்கும் படைகள் மட்டும் முன்னேறிப் போய், அந்தப் பகுதியை உறுதியாகக் கைப்பற்றிக் கொண்டன. மீதி யிருந்த படைகளெல்லாம் இங்கே தான் இறங்கின. இதில், இந்தியப் படையினர் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் உண்மையிலேயே நல்ல போராட்டக்காரர்கள். தரையிலும் ஆகாயத்திலும் வந்து தாக்கும் எதிரிகளோடு எந்த நிமிஷத்திலும் போராட அவர்கள் ஆயத்தமாயிருக்க வேண்டி யிருந்தது. தம் படைத் தலைவர் பூரண திருப்தி யடையத் தக்கபடி அவர்கள் தம் கடமையை நிறை வேற்றினதாக எனக்குத் தகவல் கிடைத்தது. போர் முனையிலும் பிறவிடங்களிலும் மிகச் சிறந்த முறையில் அவர்கள் நடந்து கொண்டார்கள்.

இத்தாலியில் இந்தியப் படைகள்

இப்போது இத்தாலியின் படை பலம் குலைந்து விட்டது. ஆகவே இந்தியப் படைகள், நாஜிப் படைகளோடு ஐரோப்பா வரை போராடித் துரத்த வேண்டி யிருக்கிறது. இப்போது இந்தியப் படைகள் இத்தாலியிலிருக்கின்றன. எதிரிப் படைகளோடு போராடிக் கொண்டு மிருக்கின்றன. போர்முனையோ கஷ்டமான மலைப்பகுதி. சமீபத்தில் பல போராட்டங்களில் எதிரிகளை விரட்டி யடித்தன. டிரிக்னோ ஆற்றங்கரை வரை வந்து விட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. 17 பவுண்ட் பீரங்கிகள் போன்ற மிகப் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட தளவாடங்கள், இந்த இந்தியப் படைகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. வடாப்பிரிக்காவில், இவர்களுடைய நாட்டார்களான இந்தியப் படைகள் எவ்வளவு வீர உணர்ச்சியோடும் மன உறுதியோடும் எதிரிகளைத் தாக்கினார்களோ, அதே உணர்ச்சி யோடு தான் இவர்களும் இருக்கிறார்கள். தம் நாட்டிற்கு மேலும் புகழ் தேடுவார்கள் என்று உறுதியாக நம்பலாம்.

இப்போது ஆசியாவிலுள்ள நம் கிழக்கோடியைப்பற்றி கவனிப்போம். மேற்கே பாலைவனத்தில் நாம் பெற்ற வெற்றிகளைப் போல், இங்கே வெற்றி பெறவில்லை. என்றாலும், தென் மேற்கு பசிபிக்கில் ஜப்பானியப் படைகளோடு அமெரிக்கப் படைகளும் ஆஸ்திரேலியப் படைகளும் போராடி குறிப்பிடத் தக்க வெற்றிகள் பெற்றன. பர்மா எல்லைப்புற நிலைமையில் மாறுதல் எதுவும் இல்லை யென்றே சொல்லலாம். நம் வேலையைச் செய்து முடிக்கு முன்பு எல்லா உபகரணங்களும் சேகரிக்கிற வரை, எப்படி மேற்கே காத்துக் கொண்டிருந்தோமோ, அது போலவே, இங்கேயும் காத்துக் கொண்டிருக்க வேண்டியதா யிருக்கிறது. என்றாலும் இங்கேயும், பெருங்கஷ்டத்திற் குள்ளாகியும், மனச்சோர்வடையக் கூடிய நிலைமையிலும், அதே போராடும் திறமை யோடு தான், இந்தியப் படைகள் போராடின.

(10-ம் பக்கம் பார்க்க)

நேசர்களைப் பெருமையுடன் வெறுக்கும் ஜப்பானியர்

ரஷ்யர்கள் தாக்குவார்களோ என்பது தான் பெரும் பயம்

ஜப்பானிய மக்களின் அடிமை நிலை

ஜப்பானிய மக்கள் தம் அரசர் கட்டளையை நிறை வேற்றுவதற்கே தாம் பிறந்திருப்பதாகக் கருதுகிறார்கள். ஜனநாயக உணர்ச்சி ஒரு சிறிதும் அவர்களுக்கு இல்லை. அரசாங்கத்தின் போக்கிலுள்ள குறைகளை எடுத்து உணர்த்த, யாரும் துணிவதில்லை. துணிந்தவர்கள் கடுந் தண்டனைகளுக்கு ஆளானார்கள். ஜப்பானிய மக்களின் தியாகம் முழுதும் ஒன்றுக்கும் உதவாத தேசீயப் புகழின் பொருட்டே பயன் படுகிறது. ஆகவே ஜப்பானிய நாடே ஒரு போர் யந்திரமாக மாறியது. இதற்குக் காரணம் ஜப்பானிய மக்கள் பிற நாடுகளெல்லா வற்றையும் கட்டியாள வேண்டு மென்று கொண்ட பேராசை தான். இந்தப் பேராசையை நசுக்க, உலக ஒத்துழைப்பும் நேசமும் தேவை. உலகச் செழிப்பிற்கே அபாயமாயுள்ள ஜப்பானிய ஆட்சிமுறைத் தத்துவம், அடியோடு அழிய வேண்டும். இவை பற்றி விளக்கி, சமீபத்தில், திருச்சி அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து தென்னாற்காடு ஜில்லா தேசீயப் போர்முனை அமைப்பாளர் எல். கே. கோவிந்தராஜலு நாயுடு அவர்கள் ஒலி பெருக்கிய பிரசங்கமாவது :—

ஜப்பானியரின் நூறு வருடப் போர்

18 மாதங்களுக்கு முன் தென்மேற்கு பசிபிக்கிலுள்ள சாலமன் தீவிகளின் மேல் படையெடுத்த காலத்து, ஜப்பானிய சர்க்கார் ஜப்பானிய ஜனங்களுக்குத் தெரிவித்ததாவது :—

"ஜப்பான் தொடுத்த போர் நூறு வருடப் போர்" என்று அட்டகாசமாக கோஷகரமாக விளம்பரப் படுத்தினார்கள். போர் தொடுத்துப் பிடித்த அன்னிய நாடுகளை தங்கள் ஆதிக்கத்தின் கீழ் இருத்திப் பிடிக்க வேண்டும் என்ற எத்தனத்திற்கு ஜப்பானிய ஜனங்கள் கூட ஒருமுகமாக சம்மதப்படுகிறார்கள். தங்கள் பெருமை வாய்ந்த சக்கரவர்த்தியின் ஆக்ஞைக்குத் தக்கவாறும், பொதுஜன செல்வாக்கும், ஆட்சி திறமையும் பெற்ற பிரதம மந்திரி ஹிடேகி டோஜோவின் எண்ணங்களுக்கு எற்றவாறும், ஜப்பானியப் பொது மக்கள் பணிந்து நடப்பதற்கு ஆயத்தமுள்ளவர்கள். ஆகையினால், ஜப்பானிய நாட்டில் சர்க்கார் ஆட்சி முறைக்கோ, ஆக்ஞைகளுக்கோ எதிரியாக ஒருவர் கூட தென்படுகிறதில்லை. இத்தகைய ஜப்பானிய ஆட்சி நிலை, ஜனநாயகத்திற்கும், சமத்துவத்திற்கும், ஜனங்களின் சுதந்தரத்திற்கும் ஒரு பெரும் அடாயத் த விளைவிக்கத் தக்கது. ஆகவே ஜப்பானிய படையெடுப்பினால், எல்லா ஆசிய நாடுகளுக்கும், மேற்கு, தென்மேற்கு, தீர பசிபிக் நாடுகளுக்கும் ஒரு பெரும் அபாயம் நேரிட்டது, விந்தைக் கிடமாகாது.

ஜப்பானிய முறை, கொடுமைகளுக்கு உள்ளாக்கும்

ஜப்பானிய முறை இந்நாடுகளிலுள்ள கணக்கற்ற கோடி மக்களை சர்வாதிகாரக் கொடுமைக்கும், நீதியற்ற இராணுவ அட்டூழியங்களுக்கும் அடிமைப்படுத்துவதாகும். ஜப்பானிய சர்வாதிகாரம், ஒருவித நவீன கொடுங் கோன்மையாகும். அதன் பயனாக, சமுதாய அங்கத்தினர்களின் கடமைகளே பெரிதாகும்! அவ்வங்கத்தினருக்கு உரிமைகள் என்பவை ஒன்றுமில்லை. ஜனங்களுடைய வாழ்க்கையை, தாம் நினைத்தவாறும், சர்க்கார் நலத்திற்கு மட்டும் எற்றவாறும் மாற்றுவதற்கு வேண்டும் நடவடிக்கைகளை எடுக்க, அரசாங்கத்தாருக்கு பாத்தியம் உண்டு. அவ்வெண்ணங்களை நம்பிக்கையுடன் கைப்பற்றிய ஜப்பானிய சர்க்கார், ஜப்பானிய சமுதாயத்தை பலவாறு கட்டாயப்படுத்தி, அவர்களின் பொருளாதார நிலையையும், பொருளாதார வாழ்க்கையையும், முழுதும் மாற்றியதோடு கூட, மதக் கொள்கையில் வேறுபாடுள்ளவர்களை பலவகையில் வதைத்து, சர்க்காருக்கு எற்ற எண்ணங்கள் இல்லாதவர்களை மறையுமாறு ஒழித்தும் பல ஆண்டுகளாக ஆட்சி நடத்துகின்றனர்.

உலக ஜனங்களின் சுயாதீனத்தையே இவ்வாறு ஒழிக்க வேண்டும் என்ற ஒரு வெறி கொண்ட ஜப்பானியர் எண்ணம் நிறைவேறினால், மக்களின் கதி என்னவது ?

ஜனங்கள் நாட்டிற்கா ? நாடு ஜனங்களுக்கா ?

என்றாலும், ஜப்பானிய சர்வாதிகாரத்தில், ஜப்பானிய ஜனங்கள் நம்பிக்கை வைப்பதற்காக அந்நாட்டுத் தலைவர்கள், கலாசாலைகள் உதவி கொண்டும், பிரசார முறையைக் கொண்டும் பல ஆண்டுகளாக ஜப்பானிய மக்களை, முழுவதும் தேச மேன்மை ஒன்றுக்கே உதவும்படி கட்டாயப் படுத்தி வந்தனர். இதன் பயனாக, ஜனங்கள் தேசத்திற்கு உழைத்தாலும், தேசம் ஜனங்கள் பொருட்டு உழைப்பதில்லை. ஆகையினால், ஜப்பானிய மக்கள் தங்கள் ஆவியையும், பொருளையும் தேசத்திற்கே உயிர் எனக் கருதப்படும் தங்கள் சக்கரவர்த்திக்குத் தத்தம் செய்ய, எப்பொழுதும் தயாரா யிருக்கின்றனர். ஜப்பானிய மக்களின் தியாகம் அவர்களுடைய வாழ்க்கையின் செழிப்பிற்கோ மேன்மைப்பட்ட சுகத்திற்கோ அபிவிருத்திக்கோ உபயோகப்படாதது கவனிக்கத் தக்கது. ஜப்பானிய மக்களின் தியாகம் முழுவதும், ஒன்றுக்கும் உதவாத தேசீயப் புகழின் பொருட்டே பயன் படுவதனால், ஜப்பானிய மக்கள், வேறு நாட்டின் மக்களின் நன்னிலையையும், சுகத்தையும், சிறப்பையும் கவனியாது, தாங்கள் தற்சமயம் மேற் கொண்ட யுத்தத்தை ஈவு இரக்கமின்றி, முடிவையும் எதிர் பாராமல் நடத்துவது, சுயாதீனத்தை நம்பிய ஜனநாய மக்களின் நகைப்புக் கிடமாகும்.

தம் தலைவர்கள் சொல்லை ஜப்பானியர் மறுப்ப தில்லை

சர்வாதிகாரத்தை நம்பிய ஜெர்மானிய நாஜிகளையும், இத்தாலிய பாஸிஸ்டுகளையும், ஐரோப்பாவில் எதிர்க்க பல கூட்டத்தார் பல வகைகளில் முனைந்ததுண்டு. ஆனால், ஐரோப்பாவில், தம்மை எதிர்த்த தம் நாட்டவர்களை சர்வாதிகாரிகள் கல் நெஞ்சுடன் கலைத்து ஒழித்தனர். இத்தகைய எதிர்ப்பு, ஜப்பானில் இல்லை. ஆடுகள் போன்று ஜப்பானிய ஜனங்கள், தங்கள் தலைவர்களைப் பின்பற்றி நடக்கிறார்கள். ஜப்பானிலே தலைவர்கள் சொல்லுக்கு வேறு மறுப்பில்லை.

பயனின்றி, பல்லாண்டு போர் புரிதற்கு எற்றவாறு, ஜப்பானிய நாட்டின் படைகளின் பெருமையில் ஒரு பெரும் மூட நம்பிக்கை பல நூற்றுண்டுகளாக இருந்து வருகிறது. பயிர் செய்யும் குடிகளையும், வேறு பல தொண்டு செய்யும் தொழிலாளர்களையும் விட, படைகளைச் சேர்ந்த வீரர்களே மேற்குலத்தோர் என்று ஜப்பானியர் முழு மனதுடன் நம்புகிறார்கள். உலகெங்கும் தேசப் பாதுகாப்புக்காக படைகள் பயன்படுவது சாதாரணம். ஜப்பானிலே படைகள், தேசத்தை ஒரு கருவியாகவும், தங்களுக்கே பணி செய்யவும் உபயோகப்படுத்துகிறார்கள்.

ஜப்பானிய நாடு, ஒரு போர் இயந்திரமாக மாறியது

ஆகையால், ஐரோப்பாவில் ஜெர்மனியையே ஒரு போர் புரியும் யந்திரமாக மாற்றியது போல், ஜப்பானியப் படைகள் ஜப்பானிய நாட்டை ஒரு போர் யந்திரமாக மாற்றிவிட்டன. ஆகையால், ஜப்பானிய சர்க்கார் முறையும், சமுதாய முறையும், பொருளாதார முறையும் எல்லாம் ஒரு நோக்கத்திற்கே உபயோகப்படுகின்றன. அந்நோக்கம் ஜப்பானியப் படைகளின் பலமாகும்.

அன்றியும், ஜப்பானிய ஜனங்கள் முழுவதும், மேல் நாட்டாரை விட வலிமையற்று உலகத் தலைமை வகிக்க வேண்டுமென்ற வெறி கொண்டவர்கள். இது காரணத்தால் தான், ஜப்பானியப் படைகள் கண்மூடியாக பைத்தியம் பிடித்தவர்களுக்குத் தகுதியான பொய் பலத்துடன், பல போர் முனைகளில் சண்டை போடுகிறார்கள். ஜப்பானியரை விட மேலான ஜனங்கள் உலகத்திலேயே இல்லை என்று நினைப்பதனால், ஜப்பானிய தளகர்த்தர்களும், கப்பற்படைத் தலைவர்களும், சமஸ்தானாதிபதிகளும், அறிஞர்களும் கூட, ஒரே எண்ணமுடையவர்களாக விநோத எண்ணங்களை மேற் கொண்டு, ஜப்பானிய மேன்மைக்காக உழைக்கின்றார்கள்.

ஜப்பானியர் ஆசைக்கு அளவில்லை

அவர்கள் பல போர் முனைகளில் செய்யும் அழும்புகளும், அட்டகாசங்களும், உலக அறிஞரின் நோக்கங்களுக்கு விரோதமாக உள்ளன என்று சொல்ல வேண்டிய அவசியங் கூட இல்லை. உலக மக்களின் அழிவும், கேடும் தான், ஜப்பானிய நோக்கங்களின் பயனாகத் தென்படும். அன்றியும், பேராசை பிடித்ததினால் ஜப்பானியர் விரும்புவது மேலும் மேலும் புதிய நாடுகளும், அவைகளின் பொருள் சாதனங்களும் தான். "ஆசைக்கு அளவில்லை" என்பதற்கு வேறு அத்தாட்சி வேண்டுமா ?

ஜப்பானியரின் நூறு வருடப் போர்

ஜப்பானியர் பேராசை எதிர் பார்ப்பது, உலக சாம்ராஜ்யம். அவர்கள் சாம்ராஜ்யத்தில் மற்ற நாடுகளின் சுவாதீனம் மறுக்கப்படும். மற்ற நாட்டு ஜனங்களின் கௌரவம் குலைவுறும். கொரியாவில் ஜப்பானிய சாம்ராஜ்யத்திற்கு உட்பட்ட இரு கோடி ஜனங்கள் படும் துன்பங்களுக்கு அளவேயில்லை. பார்மோசா, மஞ்சூரியா, சைனா நாடுகளிலுள்ள நாற்பது கோடி ஜனங்களின் சுயாதீனத்தை மறுக்க ஜப்பானியக் கொடுமைகள் பல உருவங்களைக் கொண்டன.

வேண்டியது உலக ஒத்துழைப்பும் நேசமும்

ஆயினும், சாம்ராஜ்யம் வேண்டிய ஜப்பானிய ஆசை, ஆசியா மட்டுமல்லாமல் உலகம் பூராவையும் பாதிக்கும். ஜனநாயக முறையிலும், ஜனங்களின் தனித்த சுதந்திரத்திலும் புதிதாக பற்று வைத்துவரும் ஆசிய நாடுகளின் ஜனங்களும், தற்சமயம் எதிர் பார்ப்பது, உலக ஒத்துழைப்பும், நேசமும்.

இத்தகைய சமயத்தில் நாஸி முறையைக் கைக் கொண்ட ஜப்பானிய சர்வாதிகாரம் ஆசியாவின் எதிர்கால நிலையை சீர்குலைக்க முன் வந்தது மெத்த வருந்தத் தக்கது. இதுவுமன்றி, வேறு நாடுகளின் சுதந்தரத்தை மறுத்த ஜப்பானியர் ஆசியாவுக்கே தன் ஆட்சியினால் நலம் உண்டு பண்ணுவர் என்று எதிர் பார்ப்பது, ஜப்பானியரல்லாத மற்ற ஆசிய ஜனங்களை ஏமாற்றுவதற்கே. ஜப்பானியர் நேச தேச நாடுகளை வெறுத்து ஆசிய ஜனங்கட்கு மேல் நாட்டார் மேல் வெறுப்பு உண்டாக்குவதற்குப் பல வழிகளைத் தேடுகிறார்கள். அவ்வெறுப்பின் பயனாக, அவர்கள் எதிர் பார்ப்பது ஜப்பானின் தந்நலந் தானே தவிற, ஆசியாவின் பொது நலமல்ல.

உலகச் செழிப்பிற்கே அபாயம்

அன்றியும், அத்தகைய ஜனங்களின் வெறுப்பினால் உலகில் போரும், குழப்பமும் தான் நேரும். சண்டை முடிந்த பின்னும் அத்தகைய வெறுப்பு பலவாறு உலகச் செழிப்பிற்கே நீடித்த அபாயத்தை உண்டாக்கும்.

ஜப்பானியர் இவற்றை யெல்லாம் அறிந்து, ஜப்பானிய ஜனங்களை நூறு வருஷம் நீடித்த ஒரு யுத்தத்திற்கு ஆயத்தம் செய்ய பலவாறு பொது ஜனங்களின் மனதை ஒழுங்குபடுத்துகின்றனர். சாதாரணமாய் வெளிவராத ஜப்பானிய அரசனும், அரசியும்கூட, தங்கள் மூலஸ்தானத்தை விட்டு, ஜனங்களோடு கலந்து கொள்ளுவதற்கு, ஆஸ்பத்திரிகளையும், தொழிற்சாலைகளையும் துருப்பு நிலையங்களையும் அவ்வப்போது பார்வையிடுகின்றனர்.

இதற்கென்று ராஜ்ய கௌரவம் குறையாத வகையில் ஜப்பானிய சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினி இருவர்களின் உடை கூட, பொது மக்களின் நோக்கத்தைச் சரிப்படுத்தும்படி அமைக்கப்பட்டனவாம். அவர்களின் பிரதம மந்திரி டோஜோவும் பலவாறு பொது ஜனங்களின் முன் அடிக்கடி தோன்றுகிறார். இதோடு, யுத்தத்தில் ஏற்பட்ட ஊக்கத்தை வளர்ப்பதற்கு, ஜப்பானியர் அடையும் தோல்வியைக் கூட, அவர்களுக்குத் தெரிவிப்பதில்லை. ஜப்பானியர் எப்பொழுதும் கேட்பதெல்லாம் வெற்றிச் செய்திகளே. வெற்றி யன்றி வேறு அவர்கள் எதிர்பார்ப்பதில்லை. ஆனாலும், ஒரே ஒரு பயம் ஜப்பானிய சர்க்காருக்கும், அவர்கட்கும் நீடித்த நாட்களாக உண்டு. ருஷ்யர்கள் தங்களைத் தாக்குவார்களே என்று அவர்கள் நடுங்குகிறார்கள். ருஷ்ய நிலையங்களி லிருந்து ஜப்பானிய நகரங்களை வெகு சுலபமாத் தாக்கலாம் என்பது ஜப்பானியர் நன்கு அறிந்ததே. இது காரணத்தினால், ஜப்பானிய ஜனங்கள் மூடத் தனமாக ருஷ்ய நாட்டைத் தாக்கமாட்டார்கள் என்று முழு மனதுடன் நம்புகிறார்கள். சென்ற வருஷத்தில் அமெரிக்க விமானங்கள் ஜப்பானிய நகரங்களைக் குண்டுகளால்

(11-ம் பக்கம் பார்க்க)

தேசீயப் போர் முனைப் பாடகர்கள் மறு பயிற்சி



தமிழ் ஜில்லாக்களில் உள்ள தேசீயப் போர்முனைப் பாடகர்கள் மறு பயிற்சி தஞ்சாவூரில் அக்டோபர் மாதம் 20-ம் தேதி முதல் 27-ம் தேதி வரை நடைபெற்ற போது, எடுக்கப்பட்ட படம். மாகாணப் பாட்டு விளம்பர அமைப்பாளர் மிஸ்டர் கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களும், தஞ்சாவூர் ஜில்லா தேசீயப் போர்முனை அமைப்பாளர் மிஸ்டர் எஸ். சுயம்பிரகாசம் அவர்களும் நடுவில் அமர்ந்திருக்கிறனர்.

ஜப்பானின் துரோகப் படை யெடுப்பு!

7-12-41-ல் பேர்ள் ஹார்பரில் தாக்கியதின் இரண்டாண்டு நிறைவு!

பல்லவி

எச்சரிக் கையின்றிப் பேர்ள் ஹார்பரில் எதிர்த்தான்
இழிந்தநிப் பான்தாக்கிக்குண் டவைகளை உதிர்த்தான்
(முடுக்கு) இச்சகமேயொரு துச்சமெனவுநினைச்சுஉளமதில் வைச்சுவிடமதை (எச்ச)

அனுபல்லவி

இச்சகம் பேசி ஏய்ப்பான் ஏமாந்த பேரைச் சாய்ப்பான்
இரண்டு வருடத்தின் முன் ஏழாம் டிஸ்ஸம்பரில் முன் (எச்ச)

சரணங்கள்

1 மரகதப் பச்சைப் புல்லில் மறைந் திருக்கும் நாகம் போல்
மலர் முகத்தின் கீழ்க் கள்ளம் மறைத்த வஞ்சகத் துள்ளம்
நரகதை யொத்தே ஜப்பான் நட் போடமெரிக்காவை
நாடியும் நேசம் பேசிக் கூடிடும் நாளிற் பேடி (எச்ச)

2 வஞ்சம் நிறைந்த கள்ளன் வடிவிற் குறைந்த குள்ளன்
வாயால் நகைத்துப் பேசி வாளாற் பகைத்து வீசி
துஞ்சும் துணையை வெட்டத் துணிந்தது ரோகி மட்டத்
துணைவன் ஹிட்லரால் கெட்ட தோஷ வேஷம் பூண்டிட் டே (எச்ச)

3 ஆரம்ப சூரத் தோடும் ஆதியில் வெற்றி யெங்கும்
அடைந்து வந்திட்ட ஜப்பான் உடைந்து நைந்திட்டான் இப்பால்
நேரம் வந்துற்ற தே மேல் நிமிர்ந்து நேச தேசங்கள்
நெருக்கி நிப் பானின் பலம் சுருக்கி அழிக்க இன்றே (எச்ச)

குறிப்பு.—இப்பாடல் 7-12-43 மாலை 6-40 மணிக்கு 'கிராமங்களுக்காக' என்னும் புரோகிராமில், திருச்சி அகில இந்திய ரேடியோ சங்கீத கோஷ்டியாரால் பாடப்படும்.

பற்றுகிறது!

துர்த் தேவதைகளை எல்லாம் பிரமாதமாகப் பூஜை செய்கிறான்; ஒரு மந்திரக் கோலை வைத்துக் கொண்டு, தன்னை எதிர்க்க வருகிறவர்களையெல்லாம் கல்லாக்கி நிறுத்திவிடுகிறான்; ஒரு வேதாளத்தைச் சிருஷ்டித்து, தனது காமத்தைத் தணிக்க, கண்ட பெண்களையெல்லாம் இழுத்து வரச் செய்கிறான்; கடைசியில் மகா பதிவிரதையான பால நாகம்மா மீதிலும் கை வைக்க எண்ணுகிறான் அந்த மாயா மாந்திரவாதி. ஆனால், அவனால் அவளைத் தொட முடியவில்லை. ஆயினும் பால நாகம்மா அவனிடமிருந்து தப்பி ஓட முடியவில்லை. அந்த மாந்திரவாதியின் உயிர் நிலை என்ன என்பதை அவள் அறிந்து கொள்ளுகிறாள். வெகு சிரமப்பட்டு, எழு கடலையும் தாண்டிச் சென்று, அதற்கப்பால் உள்ள தீவில், பல ஆபத்துக்களையும் சமாளித்துக் கொண்டு, அங்குள்ள கிளியைப் பிடித்து வந்து, அந்த அயோக்கிய மந்திரவாதி பாலநாகம்மாவை மந்திரக் கோலால் கல்லாக்க முயற்சிக்கையில், கிளியின் கழுத்தைப் பிடித்து நசுக்கிக் கொன்று விடுகிறான் பாலநாகம்மாவின் அருமை மகன். அதோடு ஒழிகிறான் மாந்திரவாதி. அப்புறம், அவனிடம் சிக்கிக் கிடந்த பல பெண் மணிகளுக்கு விடிவுகாலம் உண்டாகிறது. பால நாகம்மாவின் புருஷரும், அவரது சகோதரர்களும் கல்லுருமாறி, களிப்படைகிறார்கள் என்றொரு கதை இருக்கே தெரியுமா உங்களுக்கு? அந்தக் கதையில் வரும் மாந்திரவாதிக்கு ஹிட்லரை ஒப்பிடலாம்.

மந்திரவாதி ஹிட்லர்

இந்த ஹிட்லரின் மந்திரக்கோல் தான் அவர் இருபது வருட காலமாகத் தயாரித்த ஜெர்மன் ராணுவ யந்திரம், விமானப் படை, நீர் மூழ்கிகள். தனது அபார சக்தியால் ஜெர்மன் மக்களையே சொக்குப் பொடி போட்டு மயக்கி வைத்திருக்கிறார். அவர்கள் தங்களுடைய சுய நினைவே அற்றுப் போய்விட்டார்கள். ஹிட்லரின் மந்திரக்கோல், ஒரு பாவமு மறியாத பெண்களுக்கு நிகரான எத்தனை சிறு நாடுகளைச் சிறைப்படுத்தி வைத்திருக்கிறது. இப்படியே அக்ரமங்கள் செய்து கொண்டே இந்த ஜெர்மன் மந்திரவாதி பெரிய அக்ரமங்களில் தலையிட்டுக் கொண்டு விட்டான். அது தான் ருஷ்யா மீது கைவைக்கப் பார்த்தது. பாலநாகம்மாவை முதலில் கற்பழிக்க முயன்ற மாந்திரவாதியை எப்படி ஒரு அக்னி சக்கரம் எரிக்க வந்து துரத்தியதோ, அதே போல, ருஷ்யாவைக் குலைக்க முயன்ற ஹிட்லரது படைகளை செஞ்சேனைச் சுட்டுத் தள்ளிவிட்டது. இப்பொழுது ஹிட்லருக்கு, 'உடும்பு போனாலும் போகட்டும், கையை விட்டால் போதும்' என்றிருக்கிறது. ஆனால் உடும்பும் போகப் போகிறது; கையும் போகப் போகிறது; அதோடு உயிரும் போகப் போகிறது. எதிர் காலத்தில் எத்தகைய மாந்திரவாதிகளாக இருந்தாலும், இந்த ஹிட்லர் மாந்திரவாதி செய்தது போன்ற காரியங்களைச் செய்ய யாருமே பயப்படத் தான் செய்வார்கள்.

ஹிட்லர் உயிர் நிலை

இந்தச் சமயத்திலே, ருஷ்யாவுக்கு வேண்டியவர்களான நேச தேசத்தார், ஹிட்லர் மந்திரவாதியையே ஒழிக்கவும், அவரது அட்டகாசங்களுக்கு ஒரு முடிவு தேடவும், அவரது உயிர் நிலை எங்கே யிருக்கிறது என்று கண்டு பிடித்து, அதை 'க்ளோஸ்' செய்யவும் பார்க்கிறார்கள்.

இந்த உயிர் நிலை எது என்று நினைக்கிறீர்கள்? பெர்லின், ஹாம்பர்க், ரூர் பிரதேசங்களில் உள்ள தொழிற் சாலைகளும், ஜெர்மன் மக்களின் தீவிர ஹிட்லர் பக்தியும், தான். இவற்றை அடித்து நொறுக்கி வீழ்த்தவே நேச தேச விமானங்கள் நூற்றுக் கணக்கிலும், ஆயிரக் கணக்கிலும் ஜெர்மனி மீதும், ஜெர்மானியர் பிடித்த தேசங்களில் உற்பத்தி வேலைகள் நடக்கு மிடங்கள் மீதிலும் தினசரி பறந்து சென்று எகப்பட்ட விலை யுள்ள குண்டுகளை, எண்ணிக்கைப் பாராமல் உதிர்த்துக் கொண்டிருக்கின்றன. இதிலே எத்தனையோ சிரமங்களிருக்கின்றன. மேற் கண்ட பிரதேசங்களை, பால நாகம்மா கதை மாந்திரவாதியின் உயிர் நிலையைக் காத்திருந்த வேதாளங்கள், பாம்புகள், நட்டு வாக்காலிகள், அக்னிச் சுவர் போன்ற, போராடும் விமானங்கள், விமான எதிர்ப்புப் பீரங்கிகள் எல்லாம் பாது காத்துக் கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் மேற்கண்ட விமானிகள் சமாளித்துக் கொண்டுதா னிருக்கிறார்கள். ஒரு பெரிய மலை உச்சியை எறிச் சென்று அடைவ தென்றால், காலிலும், உடம்பிலும் எதாவது காயங்கள் படாம லிருக்குமா? வேஷ்டி, சட்டை கொஞ்சம் கிழியாம லிருக்குமா? அதே போல, இவ்வளவு பெரிய காரியத்தைச் சாதிக்கப் போகையில், வெடி குண்டு விமானங்கள், விமானிகள் எல்லாம் நஷ்டமாவது இயற்கை தானே? ஆனால் முடிவிலே பாலநாகம்மாவின் பையன் மாயா மாந்திரவாதியின் உயிர் நிலையைப் பிடித்துக் கொன்றது போல், நேச தேசத்தார் செய்யத் தான் போகிறார்கள். அதிலே சந்தேகமே வேண்டாம்!

ஐயோ! போன வாரம் ஜெர்மன் தலைநகரான பெர்லினில் வெடித்த குண்டுகளின் சப்தம் உலகம் முழுவதுமே கேட்டிருக்கும் போலிருக்கிறதே! ஒரு நாளில், அதிலும் ஒரே இரவில், ஒரு ஊர் மீது ஆயிரத்து எழு நூறு டன் குண்டுகள் விழுவது என்றால், லேசாகவா இருக்கும்? அந்தக் குண்டு வீழ்ச்சியைத் தாங்காது தான், பூமா தேவி கூட கொஞ்சம் அசைந்து கொடுத்தாள் போலிருக்கிறது. அதுவே துருக்கியில் பூகம்பமாக எற்பட்டதோ என்னமோ?

ஒரு வாரத்தில் நான்கு தாக்குதல்கள்

சென்ற ஒரு வாரத்திற்குள் நான்கு தடவை பிரிட்டிஷ், அமெரிக்க விமானிகள் பெர்லினுக்கு விஜயம் செய்து விட்டார்கள். மொத்தம் ஆறு எழாயிரம் டன் குண்டுகள் 'பார்' ஆகியிருக்கும் போலிருக்கிறது. பெர்லின் நகரத்தின் மத்ய பாகத்திலே தான், இத்தனை குண்டு வேடிக்கைகளும் நடந்திருக்கின்றன. அந்தக் குண்டுகள் கால்வாசி பெர்லின் நகரத்தையே பாழாக அடித்து விட்டனவாம்.

அங்கு எற்பட்ட தீ வானளாவ வளர்ந்து விட்டதாம். அதை அணைக்க வகையறியாது, வழியில் உள்ள பெரிய கட்டடங்களையெல்லாம் ஜெர்மானியரே தகர்த்துக் கொண்டிருக்கிறார்களாம். பெர்லின் நகரத்திலே தற்சமயம் மைல் கணக்கிலே ஒரு உருவான வீட்டைக் கூடப் பாராது நடந்து போகலாமாம். ஹிட்லர், கொப்பல்ஸ், ரிப்பன்ட்ராப் ஆகியோரது வாசஸ்தலங்கள் எல்லாம் சாம்பலாகி விட்டனவாம்.

லண்டன் நகரையும் 1941-லே இப்படித் தான் சாம்பலாக்கப் பார்த்தார்கள் ஜெர்மன் விமானிகள். ஆனால், ஒரு நாளில் அந்த விமானிகள் நானூற்றைம்பது டன் குண்டுகளுக்கு மேல் வீசினதே இல்லையாம். பிரிட்டிஷாரும், அமெரிக்கரும் 'பக்கா' வியாபாரிகளா இல்லையா! அதனாலே, அவர்கள் ஜெர்மானியர் கொடுத்ததை கொழுத்த வட்டியோடு சேர்த்துத் திருப்பிக் கொடுத்து, 'எ அப்பா! எவ்வளவு கொடுக்கிறாயடாப்பா!' என்று ஜெர்மானியரே பார்த்துத் திகைக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கனவில் கூட நினைத்திருக்க மாட்டார்

பெர்லின் நகருக்கு இவ்வளவு ஆபத்து வருமென்று ஹிட்லர் எக்காலத்திலும், கனவில் கூட நினைத்திருக்க மாட்டார். ஆனால், பெர்லினிலும், மற்ற தொழிற்சாலை நகரங்களிலும் நடக்கும் கோர சம்பவங்கள் அவரையே ஒரு ஆட்டு ஆட்டி யிருக்கு மென்றால், ஜெர்மன் மக்களின் மனோ திடத்தை ஆட்டியிருக்கு மென்று சொல்லவும் வேண்டுமா? ஹிட்லருக்கு இவ்வுலகில் ஆகவேண்டியது ஒன்றுமில்லை. அவர் ஒரு பிரமசாரிக் கட்டை. ஆகவே, அவர் சேர்த்து வைக்கவேண்டியது ஒன்றுமில்லை. எதோ சர்வாதிகாரப் பேய் அவரை நன்றாகப் பிடித்து ஆட்டத் தொடங்கிற்று. பேய் பிடித்தவர்களுக்கு நிறைய பலமும் உண்டாகு மென்பார்கள். அந்தப் பேய் விரட்டப்பட்டு விட்டால், எகத் தளர்ச்சி எற்பட்டு விடுமென்பார்கள். ஹிட்லரிட முள்ள பேயை விரட்டவே, உலகமே கூடி கூடி 'பிளான்' போட்டுக் கொண்டிருக்கிறது.

இதற் கிடையில், பெர்லினில் உள்ள ஆயுத உற்பத்தி சாலைகளுக்கெல்லாம் ஆபத்துக்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஆயிரக் கணக்கான டன் வெடிகள் வெடித்துக் கொண்டிருக்கையில், கல் மனசுள்ள தொழிலாளியாகத் தானிருக்கட்டுமே, கலங்காது வேலை செய்வானா? அவனவன் தன்னுடைய பெண்டாட்டி, பிள்ளைகளின் க்ஷேமத்தைப் பற்றி நினைக்க மாட்டானா? எத்தனையோ திடசாலிகள், இம்மாதிரி மனைவி, மக்களை திடீரென்று இழந்து, பித்தர்களாகி விட்டதை நீங்கள் பார்த்ததில்லையா? ஜெர்மன் மக்கள் லேசில் தளர்ந்து விட மாட்டார்கள் என்றே வைத்துக் கொண்டாலும், வெகு நாட்களுக் கப்புறமும் அப்படியே இருப்பார்கள் என்று சொல்லி விட முடியாது. அவர்களுடைய ஹிட்லர் பக்தியின் அளவினாலும், அவர்கள் பெற்றுள்ள மனோ திடத்தாலுமே, இந்த யுத்தம், பல லக்ஷக்கணக்கில் ஜெர்மானியர் பிணமாக விழுந்த பின்னும் கடுமையாகவே நடந்து கொண்டிருக்கிறது. அந்த பக்தி, மனோ உறுதி முதலில் குலைக்கப்பட வேண்டும்.

எவ்வளவோ சேதங்கள்: ஆயினும் ருஷ்யாவிலே, கியெப் என்னும் முக்ய நகரத்திற்கு மேற்கே, நாற்பத்திரண்டு மைல் தூரத்தில் ஒரு இடத்தில் ஜெர்மானியர் தங்களது சக்தி யெல்லாம் காட்டித் தாக்கி, ருஷ்யர்களைச் சற்றே பின் வாங்கச் செய்து விட்டார்கள். இத்தாலியிலே எட்டாவது சைனியமும், ஐந்தாவது படையும் முன்னேறுவது மெதுவாகவே இருக்கிறது. கால நிலைமையில் கடுமையான கோளாறு இருப்பது ஒரு காரணமாக இருக்கலாம், அதோடு ஜெர்மானியரின் எதிர்ப்பும் கடுமையாகவே இருக்கிறதாம். ஒரே ரத்த வெள்ளமாக ஓடும்படியான பயங்கர யுத்தங்கள் பல ஆங்காங்கே நடந்துகொண்டிருக்கின்றன.

எளிதில் யுத்தம் முடியாது

இவற்றை யெல்லாம் பார்த்தால், இன்னும் மூன்று மாதங்களிலோ, ஆறு மாதங்களிலோ ஜெர்மனி பணிந்துவிடும் என்று ஜோஸியம் சொல்கிறவர்கள் எல்லாம் கொஞ்சம் தயங்கத் தான் வேண்டும். அவ்வளவு எளிதில் யுத்தம் முடியும் என்று தோன்றவில்லை. ஆயினும் யுத்தத்தை நெடு நாள் நடக்க விடுவதாகவும் நேச தேசத்தார்களுக்கு உத்தேசமில்லை. அதை எப்படி முடிப்பது என்பதை யோசிக்கவே கூடிய சீக்கிரம், ஸ்டாலின், ரூஸ்வெல்ட், சர்ச்சில் ஆகிய மூன்று பெரிய தலைவர்களும் சந்திக்கப் போகிறார்களாம். தென்னாப்பிரிக்க பிரதம மந்திரியான ஜெனரல் ஸ்மட்ஸ் இங்கிலாந்திற்குச் சென்று, சர்ச்சிலோடு நெருங்கிப் பேசிக் கொண்டிருப்பது கூட, இது சம்பந்தமாகத் தானிருக்குமோ என்று எண்ணுகிறார்கள். ஒரு வேளை சர்ச்சில் இங்கிலாந்தை விட்டு வெளியே சென்று, இதர நேச தேசத் தலைவர்களோடு கலந்து பேச நேரும் பொழுது, ஸ்மட்ஸ் துரை அவருக்குப் பதிலாக ராஜ்ய நடவடிக்கைகளைப் பார்த்துக் கொள்ளக் கூடுமோ என்று கூட ஹேஷ்யம் சொல்லுகிறார்கள்.

பெர்லின் நகரம் தொடர்ந்து தாக்கப்படுவது யுத்தத்தைச் சீக்கிரமே முடிப்பதற்கான வேலைகளில் ஒன்று தான். இன்னொரு சிரமம். ஐரோப்பாவிலே இரண்டாவது போர் முனையை எற்படுத்துவதில் உள்ள சிரமம் தானது. ருஷ்யாவோ 'மேற்கு ஐரோப்பாவில் இரண்டாவது போர் முனையை ஆரம்பித்தால் தான் நல்லது!' என்று சும்மா சும்மா சொல்லிக் கொண்டே இருக்கிறது. அப்படி யிருந்தும் என் அத்தகைய போர் முனை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்று நீங்கள் கேட்கலாம். அதில் தானிருக்கிறது சிரமம்.

ஹிட்லரின் 'ரிசர்வ்' படைகள்

ருஷ்யாவிலும், இத்தாலியிலும் இவ்வளவு பயங்கரமான போர்களும், ஜெர்மானியருக்குச் சேதமும் எற்பட்டிருக்கின்றனவே; ஆனாலும் ஹிட்லர் மேல் கரையில் வைத்திருக்கும் ரிஸர்வ் படைகளைத் தொடவே இல்லை. எந்தச் சமயத்திலும் அங்கு ஆபத்து வரும்; அதைச் சமாளிக்க வேண்டுமென்றே அவர் எகப்பட்ட ஆட்களையும், விமானங்களையும் அத்திசையில் குவித்து வைத்திருக்கிறார். நேச தேசப் படைகள் எல்லாம் கப்பல் மூலம் தானே போயிறங்க வேண்டும்.

ஒரு பிரபல பிரிட்டிஷ் அதிகாரி இது சம்பந்தமாக என்ன சொல்லுகிறார் தெரியுமா? "நேற்று வரை நாம் மூன்று வாரங்களில் கொண்டு இறக்கக் கூடிய படைகளை விட, அதிகமான படைகளை எந்தப் போர் முனையிலும் கொணர்ந்து நிறுத்த ஜெர்மானியருக்கு வசதிகளிருந்தன. ஆனால், இந்த வசதிகள் நீடித்திரா. தவிர, இந்த இரு நாடுகளின் சக்திகளிலும் இனி இவ்வளவு வித்தியாசமிராது. எராளமான புதுக் கப்பல்கள் தொண்டு செய்யச் சித்தமாகின்றன. புதிது புதிதாக ஆட்களும் தயாராகிறார்கள். இன்னும் ஒரு மாதம் போகட்டும், இல்லை அடுத்த வருடம் தான் பிறக்கட்டுமே, அதற்கப்புறம் இந்த நிலைமை இராது. நமது கை ஓங்கி விடும்" என்கிறார் அவர்.

கொப்பல்ஸ் பிதற்றல்

நேச தேசத்தாரின் கை ஓங்க ஓங்க ஜெர்மானியருக்குக் கஷ்டங்கள் அதிகரிக்கும் என்று சொல்ல வேண்டுமா? நேச தேச விமானிகள் போடுகிற போட்டையும், அது காரணமாகக் கிளம்பும் தீயையும் பார்த்த கொப்பல்ஸ் துரைக்குப் பற்றிக் கொண்டு வருகிறது. அவர் ஆத்திரத்தோடு எதேதோ பிதற்றி யிருக்கிறார்.

நொண்டி வாத்தியாரும் கொப்பல்ஸும்

அதைப் பார்த்தால், நொண்டி வாத்தியாரின் கதை நினைவிற்கு வருகிறது, ஒரு காலத்தில் அவர் மகா முரடராம். நடுக் காலத்தில் அவருக்குக் கால் ஊனமாகி விட்டதாம். வகுப்பிலே மேஜை மீது உட்கார்ந்து கொள்வாராம். கடைசியாக உள்ள பையன் எதாவது சேஷ்டை செய்தால், அவர் பற்களைக் கடித்துக் கொண்டு, அடே! படவா! சும்மா இருக்கியா

(10-ம் பக்கம் பார்க்க)

நாமும் யுத்தமும்

பழங் காலப் போர் முறைக்கும் தற்காலப் போர் முறைக்கும் உள்ள வேற்றுமை—ஜப்பானியரின் 'ஷின்டோயிச' மதக் கொள்கை—டனகா அறிக்கையை அவர்கள் நிறைவேற்றும் முறை. ஜெர்மானியருக்கும் ஜப்பானியருக்கும் உள்ள ஒற்றுமை. உலகைக் கட்டியாள வேண்டு மென்னும் பேராசை. ஜப்பானியர்களின் இழிந்த செயல்கள். சரவண முத்தை கவர்னராக்கிய காரணம். சூழ்ச்சித் திறமையால் வெல்லும் முயற்சி நேச நாடுகளின் மனோ பலமும் படை பலமும். நம் நாட்டவரின் அலட்சிய புத்தி. பொது மக்கள் கடமை. வீண் செலவு செய்வதால் நேரும் தீங்குகள். பணத்தைச் சேமிக்கும் முறைகள். வியாபாரிகளுக்குப் புத்திமதி முதலியவைகளைக் குறித்து, தஞ்சாவூர் ஜில்லா தேசீயப் போர் முனை அமைப்பாளர் எஸ். சுயம்பிரகாசம் அவர்கள் "நாமும் யுத்தமும்" என்னும் பொருள் பற்றி, திருச்சிணுப்பள்ளி அகில இந்திய வானொலி நிலையத்தி லிருந்து நவம்பர் மாதம் 23-ம் தேதி ஒலி பெருக்கிய பிரசங்கமாவது :—

தற்காலம் நடந்துவரும் மகா யுத்தத்தின் பயனும், அந்த யுத்தத்திற்குக் காரணமாகவுள்ள எதிரிகளின் நோக்கங்களும், யாவரும் அறிந்து கொள்ள வேண்டியவைகளில், முக்கியமானவையாகும். நம் நாட்டில் ஆதி காலத்தில் ராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்களில் கூறப்படுகின்ற யுத்தங்களுக்கும், தற்கால யுத்தங்களுக்கும் யுத்தத் தளவாடங்களிலும், எண்ணத்திலும், முறையிலும், பயனிலும் மிகுந்த வித்தியாசங்கள் உண்டு. நம் நாட்டுப் பழங் கால யுத்தத்தில் தற்கால யுத்த ஆயுதங்கள் போலல்லாது ரத, கஜ, துரக பதாதிகள் என்ற யானையேற்றம், குதிரையேற்றம், வில்லேந்தி சண்டை செய்தல் முதலிய முறைகளில் யுத்தம் நடத்தப்பட்டது. அந்நாளில் ஓர் நாட்டரசன் மற்ருெரு நாட்டைப் பெற வேண்டுமானுல், அதனைப் பெற படையெடுத்தல் அவசியம். பொது மக்களுக்கு யாதொரு விதமான துன்பமும் இழைத்தல் கூடாது என்று நினைத்தனர். ஆதலின், தனித்த ஓர் இடத்தில் போர்க்களத்தில் தளவாடங்களோடு தாக்குதலுக்கு ஆரம்பிப்பார்கள். எதிரி தோற்று நிற்கும் சமயம், அடித்துப் பிடுங்கும் வழக்கமும் அந்த நாளில் இருந்த தில்லை. தோற்று நின்ற எதிரியைப் பார்த்து 'இன்று உன்னுடைய தளவாடங்கள் குறைந்ததாகக் காணப்படலாம். ஆனுல் உன் நாட்டிலுள்ள உன் தளவாடங்களுடனே முற்றிலும் உன்னைத் தோற்கடித்தால் தான், நான் வீரனென்று பெயரெடுக்க முடியும். ஆதலால் உன் நாடு சென்று உன் யுத்தத் தளவாடங்களோடு நாளை வந்து நில்' என்று 'இன்று போய் நாளை வா' என்று கூறியதாக நாம் படிக்கின்றோம்.

பழங்காலப் போரும் தற்காலப் போரும்

ஆனுல், தற்காலம் நடக்கும் உலக யுத்தத்தில ரத, கஜ. துரக, பதாதி கட்குப் பதிலாக, ஆயுதங்கள் தாங்கிய விமானங்களையும் டாங்கிகளையும் பார்க்கின்றோம். மற்ற இயந்திரங்களைப் பார்க்கின்றோம். அவைகளின் பயன் எதிரிகள் நாட்டில் உள்ள பொது மக்களுக்கே கஷ்டத்தையும் நஷ்டத்தையும் எற்படுத்தும் காட்சியைக் பார்க்கின்றோம் ; கேட்கின்றோம். ஆகாய விமானத்திலிருந்து எரியப்படும் குண்டு கோயில்களில் விழுகின்றன என்றும், ஆஸ்பத்திரிகளில் விழுகின்றன என்றும், பள்ளிக்கூடங்களில் விழுகின்றன என்றும் கேள்விப்படுகிறோம். ஆண்டவனைத் தொழுவதற்காகக் கோயில்கட்குச் சென்ற பக்திமான்களும், தங்கள் வியாதிகளைத் தீர்த்துக் கொள்ள ஆஸ்பத்திரிக்குச் சென்ற ஏழை மக்களும், கல்வியை வளர்க்கப் பள்ளிக்குச் சென்ற சிறுவர்களும் இவர்களுக்கு விரோதிகளா? அவர்கள் பாழ்படும் முறையில் என் யுத்தம் நடத்தப் படவேண்டும் என்று பார்ப்போமே யானுல், அது தான் இந்த யுத்தத்தின் தன்மை என்பதை அறிவோம்.

ஆகையினுல் தான், இதனை நாகரிகத்துக்கு விரோதமான யுத்தமென்றும், பொது மக்கள் யுத்தமென்றும், உலக யுத்தமென்றும் கூறுகின்ருர்கள். நம் நாட்டிலும் ஒருக்கால் ஆகாய விமான மிருந்து குண்டு வீச்செறியும் நாள் வருமேயானுல், அப்பொழுது யுத்தத்திற்கும் நமக்கும் என்ன சம்பந்தம் என்று சொல்பவர்கள் இருந்தாலும், அவர்களையும் விடாது துன்பத்திற்கு உள்படுத்தும் என்பதனை அறிவார்களேயானுல், யாவரும் இந்த யுத்தத்தைத் தவிர்க்க ஈடுபடவேண்டும் என்பது வெளிப்படையாகின்றது.

இந்த யுத்தத்திற்கு யார் ஜவாபுதாரி ?

அடுத்தபடியாக, இம்மாதிரியான நாகரிகத்துக்கும் மக்களுக்கும் விரோதமான இந்த உலக யுத்தத்திற்குக் காரணமாவார் யார் என்று பார்ப்போமானுல், யாவரும் அறிவார்கள். ஆங்கிலேயர்கள் அல்ல என்றும், அமெரிக்கர்கள் அல்ல என்றும், சைனுக்காரர்கள் அல்ல என்றும், ரஷியர்கள் அல்ல என்றும் ; ஆனுல், மேனுட்டிலே ஜெர்மானிக்காரர்களும் கீழ் நாட்டிலே ஜப்பான்காரர்களும் தான் இந்த யுத்தத்திற்கு ஜவாப்தாரிகள் என்பது வெளிப்படை.

மக்கள் நேர்மைக்கு அழகாகாது

அவர்கள் நோக்கந்தானென்ன. ஜெர்மனி தேசத்துத் தலைவராகிய ஹிட்லருக்கு, ஜெர்மனி தேசத்தையும் அதன் மக்களையும் உலக தேசங்களில் தலை சிறந்ததாகவும் சிறந்த மக்களாகவும் செய்ய வேண்டு மென்பது அடிப்படையான எண்ணம் என்பதை, யாவரும் ஒப்புக் கொள்வர். மேலும், அவர் யதேச்சாதிகாரியாய் மக்களுடைய எண்ணத்திற்கும் செய்கைக்கும் மதிப்புக் கொடாமல் 'தான் கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்னும் கொள்கையுடையாராய் மக்களுடைய உரிமைகளைப் பாழ் படுத்தி நிற்கும் தலைவர் என்பதையும் யாவரும் ஒப்புக்கொள்வர். இந்த நா டு கிராமங்களில், சாதாரணமாக, ஓர் மனிதன் மற்ருெரு மனிதனை மதிக்காமல் தன்னுடைய மனப் போக்குப்படி மற்றவர்கள் பின்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு நடப்பானுனல். அவனை 'ஏ, அப்பா ஹிட்லராக பிறந்துவிட்டாய்' என்று பழமொழி வழங்குவது யாவரும் கேட்டிருக்கலாம், இந்த நாட்டிலே பேச்சுரிமை வேண்டும், மத உரிமை வேண்டும், ஜனநாயக் ஆட்சி வேண்டும், என்று கூறுகின்ற இந்த நாளில், இவைகளுக்கு மாறுபாடான எண்ணத்தோடு ஆரம்பிக்கப்பட்ட ஹிட்லருடைய யுத்தத்திற்கு நேர் முகமாகவோ, மறைமுக மாகவோ அனுதாபங் காட்டுவது, மக்கள் நேர்மைக்கு அழகாகாது என்பதை யாவரும் ஒப்புக் கொள்வார்கள்.

டனகா அறிக்கையும் ஜப்பானியர் செயலும்.

ஹிட்லருடைய நோக்கமும் செய்கையும் இதுவானுல், கீழ்நாட்டிலே ஜப்பானியருடைய நோக்கம் இந்த யுத்தத்திலே அதை விட மோசமாக இருக்கின்றது. ஜப்பானியருடைய திட்டம் என்னவென்று 1927-வது வருஷமே அந்த நாட்டிற்கு பிரதம மந்திரியாக இருந்த டனகா என்பவர் ரகஸ்யமாக அரசருக்கு கொடுத்திருக்கின்ருர். தற்காலத்தில் ரேடியோவில் அடிக்கடி அவர்கள் 'உலக மக்கள் உய்வதற்காக இந்த யுத்தத்தில் இறங்கி யிருக்கின்றோம்' என்று கூறுவது போல, அத்திட்டத்தில் கூறவில்லை. அத்திட்டத்தில் தங்கள் நாடும் தங்கள் நாட்டு மக்களும் திறம்பட வாழும் பொருட்டு, பல நாடுகளைப் பிடிக்கவேண்டும். முதலில் சைனுவைப் பிடிக்க வேண்டும், பிறகு இந்தியாவைக் கைப்பற்ற வேண்டும், அதன் பின் ஆர்ச்சிபிலாகோ, ஏஷியா மைனர், மத்திய ஆசியா, இவைகளை கைப் பற்றி ஐரோப்பாவிலும் புகலாம் என்று அப்போதே கூறி இருக்கின்ருர். அத்திட்டத்தின் படியே தான், அவர்கள் இன்றும் நடந்து வருகின்ருர்கள் என்பது நன்கு புலப்படும்.

ஷின்டோயிச மதத்தின் "சிறப்பு"

அவர்களுடைய மதக் கொள்கையைப் பற்றி ஆராய்ந்தால், நம் நாட்டிலுள்ள எல்லா மதத்தையும் பாதிக்கக் கூடியதாக இருக்கிறது. அவர்கள் முக்கியமாகக் கொண்டாடும் மதம் "ஷிண்டோயிஸம்" என்பது. புத்த மதம் தன் செல்வாக்கை முற்றிலும் இழந்தது என்றே சொல்லலாம். "ஷிண்டோயிஸம்" என்பது இயற்கையையும் முன்னோரையும் வணங்கும் தன்மை. இம்முறையில், அநேக எண்ணிக்கை யில்லாத கடவுள்கள் உண்டு பண்ணப் படுகின்றன. மரக் கடவுள், கற் கடவுள் முதலியன. ஜப்பான்காரர்கள் தாங்கள் கடவுள் கூட்டங்களி லின்று வந்தவர்கள் என்று நம்புகின்றமையின், முதலாவதாக தங்கள் மூதாதையருக்கு வணக்கம் செலுத்துகின்ருர்கள். அந்த நாட்டு அரசனை மக்களுள் மேலான கடவுள் என்று கருதுவதோடு, சூரியனிலிருந்து நேரே பிறந்து வந்தவர் என்று அவரை மிகவும் பெருமையாக வணங்குகின்ருர்கள். இந்த "ஷிண்டோயிஸ"த்தைப் பற்றி டாக்டர் டனகா கூறும் பொழுது, "இம்மதம் ஜப்பான் தேசத்துக்கு மட்டும் தனித்த பெருமை யளிக்கக் கூடியது. அதில் மதம், தேசியம், மக்கள் ஒழுங்கு முறை எல்லாம் அடங்கியிருக்கின்றது" என்று கூறுகின்றதி லிருந்து, இந்த "ஷிண்டோயிஸ" மதத்திற்கு எவ்வளவு மதிப்பும், பெருமையும் ஜப்பானிய நாட்டிலே உண்டு என்பது விளங்குகின்றது.

இப்படிப்பட்ட கொள்கைகளையும் செயலையும் உடைய ஜப்பானியருடைய நாட்டிலே, இந்து மதத்திற்கோ, கிருஸ்துவ மதத்திற்கோ, முகம்மதிய மதத்திற்கோ அல்லது ஜனநாயக ஆட்சிக்கோ அல்லது எண்ணத்திற்கோ, இடமுண்டா என்பதை, அறிந்தோர்கள் அலசிப்பார்க்க விரும்புகிறேன். இவர்களால் கையாளப்பட்ட நாடுகளில், மக்கள் மக்களாக வாழ முடியவில்லை என்பதைச் சரித்திரம் இன்றைய தினம் கூறுகின்றது. மஞ்சூரியா, கொரியா நாடுகள் சாட்சி சொல்கின்றன.

ஜப்பானியர் போர்த் திறம் மேம்பட்ட தல்ல

ஜப்பானியருடைய போர்த் திறமும், மேம்பட்டதென்று கூறுவதற்கில்லை. தங்கள் போர்த் திறத்தில் நம்பிக்கை யிருக்குமானுல், மறைமுகமாகத் தாக்குவது வீரனுக் கழகல்ல என்ற நம் நாட்டு யுத்த தர்மத்தைக் கைக்கொண்டிருப் பார்களேயானுல், பேடியைப் போன்று சேன்ற தூதர் வருவதற்குள்ளாக, பெர்ல் ஹார்பரைத் தாக்கி யிருக்கமாட்டார்கள். யாதொரு நாட்டிலும் நாட்ட மில்லாத சுபாஷ் சந்திர போஸைச் சர்வாதிகாரியாக்கி இப்பிரசார மூலம் இந்த நாட்டைக் கைப்பற்ற வேண்டுமென்று நினைக்க மாட்டார்கள். சிலர் கூறியதுண்டு, தமிழ் நாட்டு மக்களென்ருல் ஜப்பானியர் பிரியத்தோடு நடத்துகின்ருர்கள் என்று. அதற்கு ஆதாரமாக சரவணமுத்து என்ற தமிழனைத் தலைவராகப் பினுங்கிலே போட்டார்கள் என்று. பினுங்கிலே இன்றையத் தினம் சரவணமுத்து இருந்தால், இன்று சிங்கப்பூரிலோ அல்லது மற்ற ஊர்களிலோ யாரைப் போட்டிருக்கின்ருர்கள் என்று இது வரை கூறியதுண்டா? அல்லது உள்ளபடியே ஜப்பானியர்கள் தமிழர்களிடத்து அன்புள்ளவர்களாக இருந்தால், சிங்கப்பூர் என்ற அழகான தமிழ்ப் பெயரை மாற்றி "ஷோனுன்" என்ற தங்கள் பெயரை அந்த நாட்டிற்கு வைப்பார்களா? என்று நாம் கவனிக்க வேண்டும். அவர்கள் ஒன்றிரண்டு செய்வ தெல்லாம் பிரசாரத்துக்காக, என்பது வெளிப்படை. அப்படி பிரசாரத்தினுல் மற்ருெரு நாட்டைக் கவர்ந்து கொள்ளலாம் என்று அவர்கள் நினைப்பதால், உள்ளபடியே படைத் திறத்தில் வல்லுநர்களாக இருக்க மாட்டார்களோ என்கிற சந்தேகம் பிறக்கின்றது.

நேசநாடுகளின் பலம்

இன்றையத் தினம் 33 தேசங்களும் அந்த தேசங்களின் மக்களின் மனவுறுதியும், யுத்தத் தளவாடங்களும், அவைகள் சரியான காலத்தில் சரியான முறையில் வெற்றியோடு உபயோகிக்க தளகர்த்தர்களும், அவர்களுக்கு உதவியாக வேண்டுவதை வேண்டிய காலத்து யோசித்து, சேர்ந்த நேசநாட்டு மக்கள் மனந் தளரா வண்ணம் ஓர் முடிவுக்கு வருகின்ற பெருந் தலைவர்களாகிய சர்ச்சில், ரூஸ்வெல்ட், ஸ்டாலின், சியாங்கேஷேக் போன்றவர்களும் இருக்கின்ருர்கள்.

இதற்கு மாருக நின்ற, மூன்று நாடுகளாகிய ஜெர்மனி, ஜப்பான், இத்தாலியிலே, இத்தாலியின் வாழ்வும் தாழ்வும் இன்று தெரிந்து விட்டது. இன்றையத் தினம் வைசிராயாக வந்திருக்கும் லார்டு வேவல் துரை அவர்கள் அன்றே சொன்னுர். இத்தாலி யாவற்றையும் தோற்று விட்டது. அது எதற்காக உயிர் வைத்துக் கொண்டிருக்கிறது என்ருல், தான் தோற்றவைகள் ஜெர்மனிக்குப் போய்ச் சேர்ந்ததா அல்லது நேச நாட்டிற்கா என்று பார்ப்பதற்காகத் தான் என்று இன்றையத் தினம் நாம் அறிவோம். இத்தாலி நேசதேசத்தாரிடம் வந்து கொண்டிருக்கிறது. எஞ்சி யிருப்பன ஜெர்மனியும், ஜப்பானும் தான் என்பது வெளிப்படை.

நமது கடமையும் பொறுப்பும்

இருதிறத்தாருடைய படை பலங்களைப் பார்த்த பிறகு, வெற்றி நிச்சயம் நேசதேசத்தாருக்கு என்பதில் ஒருவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. அந்த நேசதேசத்தாரில் நாமும் ஒருவர் என்பதை நினைக்க, வெற்றி நமதே என்பதில் ஐயமில்லை. ஆனுல் அந்த வெற்றியை அடைய எவ்வளவு காலம் ஆகும் என்பதில் தான் நமது கடமையும் பொறுப்பும் இருக்கின்றது.

யுத்தத்தின் போக்கு, தன்மை, அதனுல் எற்படும் பயன் யாவற்றையும் அறிந்த பிறகு, அந்த யுத்தத்திற்குக் காரணமா யிருந்த அச்சு நாட்டார் அழிவதற்கு, ஒவ்வொருவரும் தங்கள் கடமையைச் செய்ய வேண்டு

மென்று நினைப்பது அறிந்தோர்கள் தன்மையாகும். போர்க் களத்தில் நம் சேனை வெற்றியைக் காண்போம் என்று முனைந்து நிற்குங் காலை, நாட்டிலே "ராம னாண்டா லென்ன, ராவண னாண்டா லென்ன" என்று கூறுவது ஆச்சரியமாக இருக்கிறது. நம் நாட்டு மக்கள் பேசுவதையாவது யோசித்துப் பார்க்கின்றார்களா என்று சிந்தித்துப் பாருங்கள். ராமாயணம் படித்த நாட்டிலே, ராம ராஜ்யம் மேல் ராவண ராஜ்யம் கீழ் என்று தெரிந்தும், இது இருந்தா லென்ன, அதிருந்தா லென்ன? என்று அர்த்த மில்லாமல் பேசும் வழக்க மிருக்குமே யானால், அவர்களைப் பொறுப்புள்ளவர்க ளென்று கருத முடியுமா? ராவண ராஜ்யம் காணுமேயானால் அதனை யழிப்பதற்குத் தங்களாலான கடமையைச் செய்ய வேண்டாமா?

உள்நாட்டு மக்கள் சமாதானத்தை நிலை நிறுத்துவது நமது கடமையாக நினைக்க வேண்டும். யாவற்றிற்கும் அரசாங்கத்தைக் குறை கூறும் வழக்கம் ஒழிய வேண்டும். உணவுப் பொருளை அதிகப் படுத்தி, எங்கும் மக்கள் அமைதியாக வாழ ஏற்பாடு செய்தல் வேண்டும். யுத்த காலத்தில் அதிகமாகக் கிடைக்கும் பொருளை வீண் செலவு செய்யாது, எதிர் காலத்தில் தங்கள் பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்ற சேமித்து வைக்கவேண்டும். சேமித்தவைகளை தற்காப்புப் பத்திரங்களில் போட வேண்டும், வியாபாரிகள் வெகு சீக்கிரம் பணக்காரர்கள் ஆக வேண்டும் என்ற மனப் பான்மை மாறி, மக்கள் சௌகரியத்தை மனதி லிருத்தி, குறைந்த லாபத்திற்கே விற்க வேண்டும். அதிக லாபத்திற்குச் சேமித்து வைக்கும் பழக்கம் ஒழிய வேண்டும். நம் நாட்டு வேதாந்தம் "பிறக்கும் பொழுது கொண்டு வந்த தில்லை. பிறந்து மண்மே லிறக்கும் பொழுது கொடு போவதில்லை" பொருளை என்ற உண்மையை, இந்த யுத்த காலத்தில் வியாபாரிகள் கொஞ்சம் நினைப்பார்களே யானால், அதிக லாபத்திற்குச் சேமித்து வைக்கும் பழக்கமும் விற்கும் பழக்கமும் ஒழியும்.

(5-ம் பக்கம் தொடர்ச்சி:)

அரக்கான் போர் முனையில் 2 விக்டோரியா பதக்கங்கள்

அரக்கான் போர் முனையில் சாதாரணமாக வெற்றி யளித்திருக்க வேண்டிய தோர் போராட்டத்தில், நம் படைகளுக்குத் தோல்வி ஏற்பட்டது. இதற்குக் காரணம், நம் படைகளின் குறைபாடுக ளல்ல. சென்ற வருஷக் கடைசியில் அரக்கானுக்குள் முன்னேறிச் சென்ற இந்தியப் படைகளுடன் பிரிட்டிஷ் படைகளும் சென்றன. இந்த ஒவ்வொரு பட்டாளமும் மகா வீரத் தோடு எதிரியுடன் போராடி, சிறந்த புகழ் பெற்றன. ஆளுக்கு ஆள், ஜப்பானியர்களை விட, இந்தியப் படையினர் மிகவும் மேம்பட்டிருக்கிறார்கள்.

8-வது பஞ்சாப் படையைச் சேர்ந்த ஹவில்தார் பிரகாஷ் சிங் மிகச் சிறந்த தோர் விக்டோரியா பதக்கத்தைப் பரிசாகப் பெற்றார். இவருடைய படைத் தலைவர் இதற்குச் சிபார்சு செய்யவில்லை. இந்த ஹவில்தாரின் படைகளை யடுத்திருந்து அங்கே போராடிக் கொண்டிருந்த ராயல் இன்னிஸ்கில்லிங் ப்யூசிலியர்கள் இந்தப் படையினரின் வீரத்தை நேரில் கண்டு பெரிதும் பாராட்டி மேலதிகாரிகளுக்குத் தெரிவித்தனர். இந்தப் போராட்டத்தின் முடிவில் நாம் தோல்வி யடைந்தோம். எதிரிகளை விட நாம் தான் அதிகப் படைகளையும் தளவாடங்களையும் இழந்தோம். என்றாலும் இந்தப் போராட்டத்தில், 83 பரிசுகள் உடனடியாக வழங்கப்பட்டன. அவை வழங்குவது பற்றிய வாசகங்களிலிருந்து, அவற்றைப் பெற்ற ஒவ்வொருவரும், பல போர் முனைகளிலும் எவ்வளவு திறமையோடு போராடினார்கள் என்று விளக்குகிறது.

நிற்க, பர்மாவில், இந்தியப் படைகளும் கூர்க்கப் படைகளும் பிரிட்டிஷ் படைகளோடும் பர்மியப் படைகளோடும் சேர்ந்து ரோந்து போகின்றன. இதில் இந்தப் படைகளின் கை ஓங்கி யிருக்கிறது. மத்திய பர்மாவில் பிரிகேடியர் விங்கேட் தலைமையில் நடை பெற்ற போராட்டத்தில் நேர்ந்த அபாயங்களுக்கு இந்தியப் படைகளும் கூர்க்கப் படைகளும் உள்ளாயின.

மழை பெருவாரியாகப் பெய்ததனால், இருதரத்தாரும் வெகுவாக தரைப் போராடக் கூடவில்லை. என்றாலும் ஜப்பானிய தளங்களையும், சப்ளை லைன்களையும் பிரிட்டிஷ் விமானப் படையும் அமெரிக்க விமானப் படையும் தாக்கிக் கொண்டு தானிருந்தன. இப்படி அடிக்கடித் தாக்கித் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்ததன் பயனாக, நமது எதிரியின் கஷ்டங்கள் மேலும் அதிகப் பட்டன.

பர்மா எல்லைப் புறத்தில் தீவிர ஆயத்தம்

எல்லாப் பருவங்களிலும் நமது படைகள் ரோந்து போய்த் தாக்கிக் கொண்டு தான் இருந்தன. பல காரணங்களால் இந்த மாதிரி ரோந்து போய்த் தாக்கி, ஜெயத்தோடு திரும்புவது மிகவும் முக்கியமானதாகும். நமது படைகளுக்கு மனத் தளர்ச்சி உண்டாகாது. ஏனென்றால், ஆளுக்கு ஆள் எதிரியை விடத் தான் பலசாலி என்னும் எண்ணம் உண்டாகிறது. அன்றியும் எதிரியின் படைகள் எங்கெங்கே எவ்வளவு பலத்தோடிருக்கின்றன வென்றும் தெரிந்து கொள்ள உதவும். மேலும் இப்படிப் பட்ட தகவல்கள் எதிரிக்குக் கிடைக்காமலும் இது தடுக்கிறது.

ஷின் மலையில் நடை பெற்ற போராட்டத்தில், ஹவில்தார் காஜா கலேக்கு விக்டோரியா பதக்கம் வழங்கப் பட்டது என்பதி லிருந்து நமது படையினரின் வீரம் விளங்குகிறது. ஷின் மலையில் ஒரு சிகரத்திலிருந்து பெரிய குண்டுகளைக் கொண்டும் பீரங்கிகளைக் கொண்டும் ஹவில்தார் காஜா கலேயின் படையை எதிரிகள் தாக்கிக் கொண்டிருந்தனர். அதில் ஹவில்தார் காஜா கலேக்குக் காயம் பட்டது. என்றாலும், தன் காயத்தைப் பொருட் படுத்தாதபடி, தன் தோழர்களை ஊக்கினார். அதனால் அப்படையினர், ஜப்பானியர் களோடு கைகலந்து போராடி ஜப்பானியர்களில் அநேகரைக் கொன்றும் காயப்படுத்தியும், தாம் கோரிய இடத்தைக் கைப்பற்றினார்கள். இப்படிப்பட்ட உணர்ச்சி நம் படையினருக்கு இருந்து கொண்டிருக்கும் வரையிலும், எதிரிகளிடமிருந்து நம்மைப் பாதுகாக்கிறவர்களும், எதிரிகளைத் தாக்குகிறவர்களும் கெட்டிக்காரர்கள் தான் என்னும் திருப்தியோடு இந்தியர்கள் இருக்கலாம்.

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

என்ன? ஒரு உதை விட்டேன்னா எப்படி யிருக்கும் தெரியுமா?" என்பாராம். "உதையாவது, விடுகிறதாவது? அதுதான் நொண்டிக் காலாச்சே ஸார்!" என்று பையன் மனசிற்குள்ளே நினைத்துக் கொண்டு சிரிப்பானா இல்லையா?

இதேபோல்தானிருக்கிறது வாயாடி கொப்பல்ஸ் துரையின் வாய் வீச்சும். இப்பொழுது தான் ஒரு நகரத்தின் மீது குண்டு வீசுவது காட்டுமிராண்டித் தனம் என்ற உண்மை கொப்பல்ஸ் துரைக்கு உதயமாகி யிருக்கிறது. ஆனால், போலந்தில் உள்ள நகரங்கள் மீதும், ஸ்டாலின்கிராட் மீதும், லண்டன், ஸவுதாம்டன், போர்ட்ஸ்மவுத் மீதும் குண்டுகளை போடுவது மட்டும் நாகரிகமோ? ஐயோ பாவம்! தலை வலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தானே ஐயா தெரியும்? குண்டுகள் விழுந்தால் ஊர் பற்றி எரியும்; குழந்தை குட்டிகள் அவஸ்தைப்படும்; பலர் மடிவார்கள்; வீடுகள் பாழாகும் என்பதெல்லாம் கொப்பல்ஸ் துரைக்கு இப்பொழுது தான் தெரிகிறாப் போலிருக்கிறது. உடனே கோபம் பிய்த்துக் கொண்டு வருகிறது. உடனே "நாகரிகமான" யோசனை ஒன்று அவருக்குத் தோன்றுகிறது.

"இருக்கட்டும், இருக்கட்டும்! இதற்கெல்லாம் வஞ்சம் தீர்த்துக் கொள்ள ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. சீமையை நொறுக்கித் தள்ளுகிறோமா இல்லையா பாருங்கள்! சாதாரணமாக நினைத்துக் கொண்டு விட்டார்களோ எங்களை! விட்டோமா பாருங்கள்!" என்று அலறுகிறார்.

இதை யெல்லாம் கேட்டு யாரும் பயப்படவே போவதில்லை. எத்தகைய மோசமான நிலைமையைச் சமாளிக்கவும் நேசதேசத்தார் சித்தமாகவே இருக்கிறார்கள். "1944-ம் [illegible]த்திலே யுத்தத்தின் வேகம் உச்ச நிலையை அடையும். அப்பொழுது பல மனைகளில் அமங்கலச் செய்திகள் ஒலிக்கும். அதற்காக வருந்தக் கூடாது. எதிர் காலத்தின் க்ஷேமத்திற்காக நாம் செய்யும் தியாகம் இது" என்றே பிரதம மந்திரி சர்ச்சில் எச்சரிக்கை செய்திருக்கிறாரே! ஆகவே, பிரமாதமான ஆபத்து சீமைக்கு வரக் கூடும் என்பதை பிரிட்டிஷ் மக்கள் உணர்ந்திருப்பார்கள். அதோடு அந்த ஆபத்துகளைத் தடுக்கவும் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும் என்பதையும் அவர்கள் தெரிந்திருப்பார்கள்.

ஜெர்மானியர் திண்டாட்டம்

தற்சமயம், ஜெர்மானியர் ருஷ்யாவில் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். கிரிமியாவிற்குள் புகும் பாதையை நோக்கி ஒரு ருஷ்யப் படையும் வெள்ளை ருஷ்யாவில் முக்ய நகரான கோமலைப் பிடித்துக் கொண்டு, வடக்கேயும், தெற்கேயும் பிரித்து விட்டு, ஒரு செஞ்சேனையும் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. நாஜிகள் திரும்பத் திரும்ப வாலாட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களது ஜம்பம் எங்கும் சாயவில்லை.

அவர்களது க்ரூரத்தனம் எங்கும் தலை விரித் தாடுகிறது. கீயெவில் அவர்களிருந்த போது, செய்த அக்ரமங்கள் ஒவ்வொன்றாக வெளியாகிக் கொண்டிருக்கின்றன. கிட்டத் தட்ட எண்பதாயிரம் பேர்களைக் கொன்றார்களாம். பிறகு, அவர்களது உடல்களை எடுத்து நெருப்பிட்டுக் கொளுத்தினார்களாம். பல வீரர்கள் சாவதானமாக அமர்ந்து சாம்பலாகாத எலும்புகளைத் தூளாக்கினார்களாம். கடைசியிலே சாம்பலைக் காற்றிலே தூவி விட்டார்களாம். என்ன மிருகத்தன மய்யா! இவற்றை யெல்லாம் கணக்கெடுத்து வருகிறார்கள் ருஷ்யர்கள். பிறகு கணக்குத் தீர்ப்பார்கள் சாவதானமாக.

பல ஜெர்மன் நகரங்கள் காலி

நேசதேச விமானங்கள் டூலானையும், சோபியா நகரையும் தாக்கி யிருக்கின்றன. ருமேனிய நகரங்களில் பல காலி செய்யப் படுகின்றன. சென்ற மகா யுத்தம் முடிந்ததும், ஒரு ரயில் வண்டியில் உட்கார்ந்து கையெழுத்து போட்டார்கள். அந்த வண்டி, சென்ற வார நேசதேசத் தாக்குதலில் பஸ்பமாகி விட்டதாம்.

இத்தாலியிலே போர் நிலைமை கொஞ்ச மந்தமாகவே இருக்கிறது. இப்பொழுது தான் கொஞ்சம் கொஞ்சமாக அங்கே மானம் வெளுத்துக் கொண்டிருக்கிறதாம். இது வரை, பிரிட்டிஷ் படைகள் முன்னேறிய வண்ணம் தானிருந்திருக்கிறார்கள். ஜெர்மானியரும் லேசில் விடுவதாக இல்லை. சாங்க்ரோ என்ற நதியருகே இந்தியப் படைகள் மகத்தான காரியங்களைச் சாதித் திருக்கின்றனர். இத்தாலியில் உள்ள நாஜிகளுக்கு "நாம் முன்னேற வேண்டும்!" என்ற கவலை இல்லை. பிரிட்டிஷ் படைகள் முன்னேறா திருக்க வேண்டுமே என்ற கவலை தான் அவர்களுக்கு. "சாங்க்ரோ நதி யருகே நின்று கடைசி வரை போராடுங்கள்" என்று ஹிட்லர் உத்திரவு போட்டு விட்டாராம். சரி! அந்த இடத்திலே எத்தனை பேர்களுக்குச் சவக் குழிகள் தோண்ட வேண்டுமோ தெரிய வில்லை.

கிழக்கு மத்திய தரைக் கடல் பிரதேசத்திலே சாமாஸ், காஸ் தீவுகளை ஜெர்மானியர் கைப்பற்றினார்கள் அல்லவா? அதற்கு முன் அங்கிருந்த நேசதேசப் படைகள் ஜாடாவாக, தந்திரமாக வெளியேறி விட்டனவாம். ஜெர்மானியர் நிச்சயமாக ஆச்சரியக் கடலில் அங்கு மூழ்கியே போயிருக்க வேண்டும்.

"இந்தத் தீவுகள் போனதால் ஒன்றும் குடி முழுகி விடவில்லை. சண்டையின் இறுதிக் கட்டம் வந்து கொண்டிருக்கிறது. மூலஸ்தானத்தில் சரியானபடி அறை வைத்தால், இதெல்லாம் தானாக விழுந்து விட்டுப் போகிறது என்கிறார் ஒரு ரஷ்யர்."

போப்பிடம் ஜெர்மன் தூது

இந்நிலையில், போப் பாண்டவரிடம், ஜெர்மன் தூதரான வான் பேப்பன் ஏதோ ரகசியம் பேசிக் கொண்டிருக்கிறாராம். சமாதானப் பேச்சாக இருக்குமோ என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் யார், யாருடன் சமாதானம் பேசுவது? நேசதேசத்தார்கள், அச்சு நாட்டார் நிபந்தனை யின்றி சரணடையும் வரை சமாதானம் பேசப் போவதில்லை. அப்படி யிருக்க, சமாதானம் பேசப் போகும் இரு கட்சியினர் யார்?

இந்திய விமானப் படையின் புகழ்

'டங்கர்க் வெளியேற்றத்தின்போது நிகழ்ந்த காதை

இந்தியாவிலுள்ள மக்களும் சுதேச சமஸ்தான மன்னர்களும் கொடுத்துதவிய விமானங்கள் பிரிட்டனில் நல்ல வேலை செய்திருக்கின்றன.

இந்த யுத்தத்தில் போராடிக் கொண்டிருக்கும் பல வகைப் போர் விமானக் கோஷ்டிகளில் குறிப்பிடத் தக்கவை மூன்று 'ஸ்பிட்பையர்' (அக்கினிக் கக்கும்) விமானக் கோஷ்டிகள். இவற்றிற்கு பஞ்சாப் போர் விமானக் கோஷ்டிகள் என்று பெயர். பரோடா மகாராஜாவும், போபால் நவாபும் கொடுத்து உதவிய விமானக் கோஷ்டிகளுக்கு முறையே பரோடா விமானக் கோஷ்டி, போபால் விமானக் கோஷ்டி என்று பெயர். அது போலவே, மைசூர் மகாராஜா அவர்கள் கொடுத்துதவிய விமானக் கோஷ்டிக்கு மைசூர் விமானக் கோஷ்டி என்று பெயர். ஐக்கிய மாகாண வாசிகள் கொடுத்துதவிய 'ஹரிகேன்' விமான கோஷ்டிக்கு, ஐக்கிய மாகாண விமான கோஷ்டி யென்று பெயர். சென்னை மாகாண வாசிகள் கொடுத்த தொகையைக் கொண்டு, ஒரு ஹலிபாக்ஸ் வெடிகுண்டு விமானக் கோஷ்டியும் மூன்று போர் விமானக் கோஷ்டிகளும் வாங்கப்பட்டன. மற்றொரு விமானக் கோஷ்டிக்கு 'பம்பாய் மாகாணம்' என்னும் பெயர் எழுதப்பட்டிருக்கிறது. ஹைதராபாத் நிஜாம் கொடுத்த தொகையைக் கொண்டு, இரண்டு கோஷ்டி போர் விமானங்களும், ஒரு வெடிகுண்டு விமானக் கோஷ்டியும் வாங்கப்பட்டன. இவற்றிற்கு ஹைதராபாத் கோஷ்டிகள் என்று பெயர். இவை மட்டுமன்றி, இந்திய தபால் தந்தி இலாக்காக் காரர்கள் கொடுத்துதவிய போர் விமானங்களு மிருக்கின்றன. இந்திய மக்கள் கொடுத்துதவிய மற்ற விமானங்களும் இருக்கின்றன.

டங்கர்க் போராட்டம் மிகவும் நெருக்கடியான நிலைமையில் இருந்தது. அப்போது, மணித் தோறும் இடைவிடாது விமானப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. ஜெர்மன் வெடிகுண்டு விமானங்களுக்கு ஆதரவாக ஒரு பெருங் கூட்டமாகப் போர் விமானங்கள் வந்தன. அவை, டங்கர்க்கிலிருந்து காலி செய்து கொண்டிருந்த படையினரை மிகவும் இம்சித்தன. என்றாலும் மணிக்கு மணி, பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த போர் விமானங்கள் அவற்றோடு போர் தொடுத்தன. இந்தப் போராட்டத்தில், பஞ்சாப் போர் விமானக் கோஷ்டியைச் சேர்ந்த 'ஸ்பிட்பையர்' விமானங்கள் மகா வீரமாகப் போராடின. பிரிட்டிஷ் படைகளை ஏற்றிக் கொண்டு வந்த கப்பல்களை மூழ்கடிக்க வேண்டி, பெரிய நாஜி வெடிகுண்டு விமானக் கோஷ்டிகள் முயன்றன. எல்லா வகைக் கப்பல்களும் கடலில் மிதந்து கொண்டிருந்தபடியால், எதிரி குண்டுகள் தவறாமல் ஏதாவது ஒன்றை நாசப்படுத்தக் கூடும். கொஞ்ச நேரம் நடந்த போராட்டத்தில் ஒரு 'ஸ்பிட்பையர்' விமானக் கோஷ்டி மட்டும் 12 ஜெர்மன் விமானங்களை நாசஞ் செய்தன. மறுபடியும் அது கிளம்பிப் போய் 6 விமானங்களை நாசப்படுத்தித் திரும்பியது. ஹைதராபாத் ப்லென்ஹீம் விமானக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் ஒரு 'ஜார்ஜ் க்ராஸ்' பதக்கமும், ஒரு டி.எஸ்.ஓ., 12 டி.எப்.சி., ஒரு வீரத் தண்டு (பார்), 19 டி.எப்.எம்., ஒரு எம்.பி.இ. ஆகிய கௌரவங்களைப் பெற்றனர். ஹைதராபாத் என்னும் பெயர் தாங்கியுள்ள இரண்டு 'ஸ்பிட்பையர்' விமானக் கோஷ்டிகளிலும், 'ஹரிகேன்' போர் விமானக் கோஷ்டிகளிலும் உள்ள விமான மோட்டிகள் பிரிட்டனிலிருந்தும், ஏறக் குறைய எல்லாக் குடியேற்ற நாடுகளிலிருந்தும் வந்தவர்கள். ஜெர்மன் விமானப் படைகளை எதிர்த்து, இந்த இரண்டு விமானப படைக் கோஷ்டிகளும் மிகச் சிறந்த முறையில் போராடி யிருக்கின்றன. இந்த இரண்டு போர் விமானக் கோஷ்டிகளும் சேர்ந்து எதிரி விமானங்களில் நூறுக்கு அதிகமாகவே சுட்டு வீழ்த்தி யிருக்கின்றன. இங்கிலாந்தின் தென் கரையில் தன் முழு பலத்தையுங் கொண்டு எதிரி தாக்கிக் கொண்டிருக்கும் போது, 'ஸ்பிட்பையர்' விமானக் கோஷ்டி 24 ஜெர்மன் விமானங்களைச் சுட்டு வீழ்த்தியது. அதற்குப் பிறகு இரண்டு முறை பிரிஸ்டல், சௌதாம்ப்டன் நகரங்களின் பாதுகாப்பிற்காக 'ஸ்பிட்பையர்' விமானக் கோஷ்டி போராடியிருக்கிறது. டார்செட்டில் நடைபெற்ற பெரும் விமானப் போரிலும் இவை ஈடுபட்டிருந்தன. பிரிஸ்டலில் நடைபெற்ற போராட்டத்தில் 80 எதிரி வெடிகுண்டு விமானங்களில் 5 விமானங்களைச் சுட்டு வீழ்த்தின. இவ்வாறாக, இந்த மூன்று விமான கோஷ்டிகளும் சேர்ந்து 42 யுத்த விருதுகள் பெற்றன.

1940-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் பிரிட்டனுக்கு மேலே நடைபெற்ற போராட்டத்தில், லண்டனைப் பாதுகாப்பது சம்பந்தமாக, போராட 'ஸ்பிட்பையர்' விமானக் கோஷ்டியினர் பெரிதும் ஈடுபட்டிருந்தனர். அப்போது முதன் முதலாகப் போருக்குக் கிளம்பிய போது, அவர்கள் 13 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தினர். லண்டன் பாதுகாப்புக்காக நடைபெற்ற போராட்டத்தில் 4 நாட்களில் 30 எதிரி விமானங்கள் நாசஞ் செய்யப்பட்டன.

பிரிட்டனுக்கு மேலே நடைபெற்ற போரில் கலந்து கொண்ட மற்றொரு இந்திய 'ஸ்பிட்பையர்' விமானக் கோஷ்டியின் காதை யொன்றுண்டு. ஒரு நாள், இங்கிலாந்தின் தெற்குக் கரையிலும் கிழக்கு கரையிலும் உள்ள துறைமுகங்களையும் கப்பல்களையும் தாக்கி நாசமாக்கி விடவேண்டு மென்னும் உறுதியோடு 400 எதிரி விமானங்கள் கிளம்பி வந்தன. அந்த ஒரே நாளில், குறைந்தது 60 எதிரி விமானங்கள் நொறுக்கப்பட்டிருக்கும். அன்றையத் தினம் இந்தக் குறிப்பிட்ட விமானக் கோஷ்டி நான்கு முறை போராடச் சென்றது. ஒருதரம், அவற்றின் விமான மோட்டிகள் 10 மெஸஸர்ஷிமிட் 110 எஸ் விமானங்களை நாசஞ் செய்தன. இந்த விமானக் கோஷ்டி கிழக்காங்கிலியக் கரையோரத்தில் போய்க் கொண்டிருந்த கப்பலுக்குக் காவலாகப் போய்க் கொண்டிருந்தது. இந்தக் கோஷ்டி அங்கே வந்த போது எதிரி விமானங்கள் கப்பல்களைத் தாக்கத் தயாரா யிருப்பதைக் கண்டவுடனே, திடீரெனக் கிளம்பிப் போய் எதிரி விமானங்களில் பத்தைச் சுட்டு வீழ்த்திவிட்டன.

சென்னை வீர விமானக் கோஷ்டி, சரித்திரப் புகழ் பெற்று விட்டது. பிரிட்டிஷ் படைகள் பின்வாங்கி டங்கர்க் கரைக்கு மேலே நிகழ்த்திய போராட்டத்தில் தான், இந்தப் புகழ் அதற்குக் கிடைத்தது. அப்போது நடைபெற்ற போராட்டத்தில், 3 நாட்களில், 60 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. 1940-ம் வருஷம் மே மாதம் 29-ம் தேதி மட்டும், இந்த விமானக் கோஷ்டி 37 எதிரி விமானங்களை நாசப்படுத்தின.

இங்கிலாந்தில் வெகு சில இந்தியர்களே வசிக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் போராடும் படைகளில் சேர்ந்திருக்கிறார்கள். அநேகர் விமானப் படையிலும் சேர்ந்திருக்கின்றனர். இவர்களில் சற்றேறக் குறைய 50 பேர்கள் கமிஷன் பெற்ற உத்தியோகஸ்தர்கள். இவர்கள் இந்தியாவின் பல பகுதிகளி லிருந்தும் பர்மாவின் பல பகுதிகளிலிருந்தும் வந்தவர்கள்.

அரசாங்க அச்சுக்கூட யுத்தப் பகுதி

முதலாவது ஆண்டு விழா

நாடக மேடையில் ஒரு நடிகர் தோன்றுவதற்கு உற்ற துணைவரா யிருப்பவர் வேடங்கள் அணிவிப்பவர்கள். அது போலவே, ஆசிரியர்கள் பத்திரிகைகளை வெளியிட வேண்டுமானால், அச்சுக் கூடக்காரர்களின் பேருதவியும் இன்றியமையாதது. யுத்த சஞ்சிகையை வெளியிடுவதில் சென்னை அரசாங்க அச்சுக்கூடத்தார் உதவியும் கூட்டுறவும் பெரிதும் பாராட்டத் தக்கது. யுத்த சஞ்சிகையின் தோற்றம் நாளுக்கு நாள் உயர்ந்து வருவதற்கு முக்கிய காரணம், யுத்தப் பிரசார இலாக்காவைச் சேர்ந்த பத்திரிகாசிரியர்களோ, அரசாங்க அச்சுக்கூடத்தார் பூரணமாக ஒத்துழைத்தது தான். ஆகவே, இந்த அச்சுக் கூடத்தின் யுத்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள், இதன் முதலாவது ஆண்டு விழாவை நடத்த முன் வந்தது பொருத்தமே.

சென்ற நவம்பர் மாதம் 27-ம் தேதி மாலை அச்சுக்கூடத்திலுள்ள வெளியில் அச்சுக்கூட சூப்ரண்டு மிஸ்டர் ஏ. லெப்பர் தலைமையில் ஆண்டு விழா நடை பெற்றது. கூட்டம் நடை பெறும் முன்னதாக, சிற்றுண்டி விருந்து நடைபெற்றது. ஸ்ரீமதி லெப்பர், ஸ்ரீமதி ஹார்வி, காப்டன் ஜி. டி. பி. ஹார்வி, மிஸ்டர் டி. ஏ. வி. நாதன், யுத்தப் பிரசார டைரக்டர் ஆபீசைச் சேர்ந்தவர்களும் விஜயம் செய்திருந்தார்கள். புகைப் படம் எடுக்கப்பட்ட பிறகு, நடைபெற்ற கூட்டத்திற்குத் தலைமை வகித்த மிஸ்டர் லெப்பர், இந்தப் பகுதியின் தோற்றத்திற்கும், சிறந்த வேலைக்கும், வளர்ச்சிக்கும் டிபுடி சூப்ரண்டு மிஸ்டர் ஜி. எப். அமலநாதன் அவர்கள்தான் பொறுப்பாளி யென்றும், அவருடைய இடையறாத உழைப்பின் பயனாகத் தான், இந்த வேலை சிறந்த முறையில் நடை பெறுகிறதென்றும் கூறினார்.

காப்டன் ஜி. டி. பி. ஹார்வியவர்கள், இந்தியா முழுவதிலும் இந்த அச்சுக்கூடத்தைப் போல் சிறந்த தொன்றில்லை யென்றும், யுத்தப் பிரசார வெளியீடுகளை அழகிய முறையில், காலந் தாழாது அச்சிட்டுக் கொடுப்பது பற்றி அச்சுக்கூடத்தின் தலைவருக்கு நன்றி கூறினார்.

பிறகு பேசிய, "மெட்ராஸ் வார் ரிவ்யூ" ஆசிரியர் மிஸ்டர் டி. ஏ. வி. நாதன் அவர்கள், யுத்தப் பகுதியைச் சேர்ந்த ஒவ்வொருவரும் எவ்வளவு சிறந்த முறையில் ஒத்துழைக்கின்றார்கள் என்று குறிப்பிட்டு, பொதுவாக அனைவருக்கும் குறிப்பாக, டிப்டி சூப்ரண்டு மிஸ்டர் ஜி. எப். அமலநாதன் அவர்களுக்கும், போர்மன், மிஸ்டர் கே. ஆர். ராஜபூஷணம் அவர்களுக்கும், டிஸ்பாட்ச் மானேஜர் மிஸ்டர் எம். கண்ணபிரான் பிள்ளை அவர்களுக்கும், 'இம்போசர்'களான, ஆர். டி. சுந்தரேசன், எம். முனுசாமி நாயக்கர் முதலியோருக்கும் நன்றி கூறினார்.

மிஸ்டர் ஆர். சிவானந்தம் அவர்கள் நன்றி கூற, விழா இனிது முடிந்தது.

(6-ம் பக்கம் தொடர்ச்சி.)

பாய்ச்சினாலும் ஜப்பானியர் பயத்துடன் எதிர் பார்த்தது, அமெரிக்கத் தாக்குதலல்ல. ருஷ்யத் தாக்குதலே. அவர்கள் தடுக்க விரும்புவது. 'டூ லிட்டில்' தாக்குதல் போன்று, இனி அமெரிக்கப் படைகள் ஜப்பானிய நாட்டைத் தாக்கு மென்று நம்பவில்லை. ஆயினும், அத்தாக்குதலுக்குப் பின், ஜப்பானிய நாட்டில் ஆகாய விமான எதிர்ப்புக் கேற்ற ஆயத்தங்கள் பல அதிகப்பட்டன. இதற்கென்று விமானத் தாக்குதலுக்குச் சுலபமாக உட்படக் கூடிய நகரங்களைக் கூட, ஜப்பானியர் பொது மக்களுக்குக் காட்டிக் கொடுத்தனராம். என்றாலும், ஜப்பானியர் தங்கள் ஜனங்களுக்கு அதே காலத்தில் இவ்வித எதிர்ப்பின் ஆயத்தம் வீண்போகும்படி பிரசார முறைகளைப் பிரயோகித்தனர். உதாரணமாக ஜப்பானிய சர்க்கார் சொன்னதன் பிரகாரம் தங்கள் நாட்டிலே புதிதாய் ஏற்பட்ட பாதுகாப்புக்குரிய ஆயத்தங்கள் மிக்க பலத்தன வாகவும், எதிரி விமானங்களை நாட்டுக்குள் விடாமல் தடுக்கக் கூடியனவாகவும் அமைக்கப்பட்டன என்று கூறினராம். இதை நம்பிய ஜப்பானிய ஜனங்கள், ஆகாய விமான அபாயத்திற்கு உண்மையாக உதவத் தக்க ஆயத்தங்கள் ஒன்றும் செய்யவில்லை.

பதுங்குவதற்கு நரிக் குழிகளா?

விமான எதிர்ப்புக் காலத்தில் பதுங்குவதற்கு வேண்டும் இடங்கள் கூட வீட்டுப் பின்புறங்களில் நரிக் குழிகள் போல் அமைக்கப்பட்டனவாம். இத்தகைய ஆயத்தங்கள் பயனற்றவை என்று ஜப்பானிய ஜனங்கள் அறிவார்கள். ஆயினும், தங்கள் தலைவர்களின் மேல் வைத்த நம்பிக்கையின் காரணத்தால், சண்டைக் கொடுமைகள் தங்கள் நாட்டிற்குள் ஏற்படாது என்று ஜப்பானியர் நினைக்கின்றனர். ருஷ்யர்கள் மாத்திரம் போர் தொடுக்காமல் இருந்தால், யுத்தத்தை வெகு தூரத்திலேயே நிறுத்தி வைக்க முடியும் என்கின்றனர்.

ஜெர்மானியர்களைப் பொறுமையுடன் வெறுக்கின்றனர்

ஜப்பானிய ஜனங்கள் ஜெர்மானிய நண்பர்களை பொறுமையுடன் வெறுக்கின்றனர். இத்தாலியரை அவர்கள் மதிப்பதில்லை. அவர்கள் புகழ்வது ருஷ்ய சேனைகளையே. ஆயினும், அச்சு நாட்டார் மேற்கொண்ட முக்கூட்டு உடன்படிக்கை மேலானதே என்று வீண் மொழியாக விளம்பரப் படுத்துகிறார்கள். ஜெர்மானியத் தோல்விகளை ஜப்பானியர் மறைத்து வைப்பது நேசப் படைகளின் ஓங்கிய வன்மையை ஒளிப்பதற்கே.

ஜப்பானிய ஜனங்களைப் புறக்கணிப்பதற்கு முதலாவதாக இருப்பது அவர்கள் வன்மையின் திட்டத்தைச் சரிவர, நேச தேசங்கள் உணருவது. அவர்களும் பலம் குறைந்தவர்களென்று நாம் நினைத்தால் [illegible] முடித் தனமாகும். முழு மனதுடனும், ஏற்ற [illegible]வும், ஆவேசத்துடனும், அவர்களை நாம் தாக்கி, அவர்கள் அடியோடு சர[illegible] யடையும் வரை, யுத்தத்தை நடத்துவது அவசியம். [illegible] ஜப்பானிய ஜனங்கள் தோல்வியடைந்தோம் [illegible] எப்போதும் ஒப்புக் கொள்ளார். ஆகையின் ஜப்பானியரின் புறக்[illegible] நேசப் படைகளின் பிரதான பாத்தியதையாகும்.

யுத்த நாட் குறிப்புகள்

பிரிட்டனும், ஜெர்மனியும்.

நவம்பர் 24.—மாட்சிமை தங்கிய அரசரும் அரசியாரும் தற்போதைய பார்லிமெண்ட் சபையின் 9-வது கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள். அதை யடுத்து காமன்ஸ் சபையில் நடை பெற்ற விவாதத்தில் டிபுடி பிரதம மந்திரி மிஸ்டர் அட்லியும் கலந்து கொண்டார்.

உலகத்தையே கட்டியாள வேண்டு மென்னும் கருத்தோடு, பிரிட்டிஷ்-அமெரிக்க-சீன-ரஷ்ய ஒப்பந்தம் ஏற்பட வில்லை யென்பதை வற்புறுத்தி மந்திரி மிஸ்டர் ரிச்சர்ட் லா, அன்னிய நாட்டுப் பத்திரிகைப் பிரதிநிதிகள் சங்கத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

நவம்பர் 25.—"புது உலகம்" என்னும் பொருள் பற்றி பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் முன்னிலையில் பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ் ஒரு பிரசங்கம் செய்தார்.

ஜட்லந்தில் 2½ லட்சம் ஜெர்மானிய படைகள் வந்து திரண்டிருக்கின்றன.

நவம்பர் 29.—'ஆப்டன்ப்லாடெட்' பத்திரிகையின் பெர்ன் நிருபரிடமிருந்து, ஜெர்மன் ஸ்தானீகரான பான் பாபன், வாடிகன் வந்து சேர்ந்திருப்பதாகத் தகவல் இடைக்கிறது.

நவம்பர் 30.—அத்தியாவசியமாக இல்லாதவர்கள், பெர்லின் நகரத்தை விட்டுப் போய்விடவேண்டுமென்று பெர்லின் ஏ.ஆர்.பி. அதிகாரிகள் கட்டளையிட்டிருக்கிறார்கள்.

அமெரிக்காவும், அட்லான்டிக்கும்.

நவம்பர் 25.—நன்றி யறிதல் நாளை முன்னிட்டு தலைவர் ரூஸ்வெல்ட் ஒரு பிரகடனம் செய்தார்.

நவம்பர் 26.—அமெரிக்கப் போர்க் கப்பல்கள் 817 இப்போதிருக்கின்றன வென்று அமெரிக்கக் கப்பற்படை மந்திரி கர்னல் ப்ராங்க் நாக்ஸ் கூறினார்.

நவம்பர் 30.—மிஸ்டர் சர்ச்சிலும், மிஸ்டர் ரூஸ்வெல்டும், ஜெனரல் ஷியாங் கெய் ஷேக்கும் ஏற்கெனவே கெய்ரோவில் சந்தித்துவிட்டார்களென்றும், பாரசீகத்திற்குப் போய் அங்கே டேரானுக்கருகில் எங்கேயோ ஓரிடத்தில் மார்ஷல் ஸ்டாலினை இவர்கள் சந்திக்கப் போவதாகவும் லிஸ்பன் செய்தி அறிவிக்கிறது.

இந்தியா, பர்மா, இலங்கை.

நவம்பர் 24.—பார்லிமெண்ட் சபையை ஆரம்பித்து வைத்துப் பேசிய மன்னர் பிரான், இந்தியாவிலுள்ள கஷ்ட நஷ்டங்களைக் குறிப்பிட்டுப் பேசினார்.

இந்திய அரசாங்க சபையில் நடைபெற்ற விவாதத்தின் போது, ஜப்பானியர்கள் வசம் 76 ஆயிரம் இந்தியப் படைகள் இருப்பதாகவும், அவர்களை மிகவும் கொடுமையாக ஜப்பானியர்கள் நடத்துவதாகவும், மேன்மை தங்கிய இந்திய பிரதம படைத் தலைவர் சர் க்ளாட் ஆக்கின்லெக் குறிப்பிட்டார்.

நவம்பர் 25.—பஞ்சாப் பிரதம மந்திரிக்கும், 3 மந்திரிகளுக்கும் மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் மேன்மை தங்கிய வைசிராய் பிரபு பேட்டி தந்தார்.

நவம்பர் 26.—கராச்சியில், எச்.எம்.ஐ.எஸ். "ஹிமாலயா" என்னும் பீரங்கிப் பயிற்சிக் கப்பலை, கப்பற்படை "ப்ளாக் ஆபீசர்" வைஸ் அட்மிரல் ஜே. எச். காட்ப்ரே ஆரம்பித்து வைத்தார்.

நவம்பர் 26.—இந்தியாவின் யுத்த முயற்சி பற்றி இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் சுற்று பிரயாணம் செய்து பிரசாரம் செய்யும்படி அனுப்பப்பட்ட கோஷ்டியினர் லண்டன் போய்ச் சேர்ந்தனர்.

நவம்பர் 27.—யுத்த நிர்வாகம் சம்பந்தமாக மேன்மை தங்கிய வைசிராயின் ஆலோசகராக நியமிக்கப்பட்ட சர் ஆர்ச்சிபால்ட் ரோலண்ட்ஸ் நியூ டில்லி வந்து சேர்ந்து தன் பதவியை ஏற்றுக்கொண்டார்.

நவம்பர் 29.—டிபுடி பிரதம படைத் தலைவரான ஜெனரல் சர் ஆலன் ப்ளெமிங் ஹார்ட்லி, தன் பதவியை ராஜிநாமா செய்திருக்கிறார்.

ரஷ்யாவும் பின்லந்தும்.

நவம்பர் 24.—டினிப்பர் வளைவிற்குள்ளே யிருக்கும் அனுப்ரெய்ப்கா முதலிய ஊர்களை சோவியத் படைகள் கைப்பற்றிக் கொண்டன. ஸ்னெமென்கா, நிகோபோல் ஆகிய ஊர்களை நோக்கி முன்போலவே இப்படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

டினீப்பர் ஆற்றிற்கும் ப்ரிபெட் ஆற்றிற்கும் இடையே யுள்ள முக்கோணத்திற்குள் முழுதும் சோவியத் படைகள் புகுந்து விட்டன.

ஷிடோமீருக்கு வடக்கிலும் கிழக்கிலும் ஜெர்மன் படைகள் மேலும் போராட முடியாததோர் நிலைமை ஏற்படுகிற வரையிலும், போராட்டம் நடை பெற்றது. க்ரெமென்சுக்-ஸ்னெமென்கா ரயில்வே லைனுக்கு அருகில் கடுமையான போராட்டம் நடை பெற்றது. கோமெல் பகுதியில் கடுமையான போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

போலந்தின் தென் பகுதியில் ரஷ்யர்கள் தாக்க ஒட்டாதபடி தடுக்கும் பொருட்டு, ஹங்கேரியப் படைகள் அங்கே அனுப்பப்பட்டிருக்கின்றன.

நவம்பர் 26.—சென்ற இரண்டு வருஷங்களாக "ஒய்ட்" ரஷ்யாவைச் சேர்ந்த கோமெல் நகரம் ஜெர்மானியர் வச மிருந்தது. சோவியத் படைகள் இதை மீண்டும் கைப்பற்றி விட்டார்கள்.

நவம்பர் 26.—கோமலை சோவியத் படைகள் கைப்பற்றின.

நவம்பர் 28.—ரஷ்யப் படைகள் மோசிரை வளைந்து கொண்டன.

நவம்பர் 29.—கிரிமியாவிற்குப் போகும் பாதையை, வட திசையில் ரஷ்யப் படைகள் பலமாகத் தாக்கின.

நவம்பர் 30.—ஷ்லோபினை நெருங்கி சோவியத் படைகள் வந்து கொண்டிருக்கின்றன. ஸ்மியாவை ரஷ்யப் படைகள் ஆபத்திற்குள்ளாக்கி யிருக்கின்றன.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

நவம்பர் 24.—எட்டாம் படை, ஆல்பெடனா, சான் ஆஞ்செலோ என்னு மிடங்களைக் கைப் பற்றிக் கொண்டு, மேலும் முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

ஜெனரல் மண்ட்காமரியின் படைகள் சாங்ரோ ஆற்றங் கரைக்கு வந்து சேர்ந்தன.

நவம்பர் 25.—எட்டாம் படை சாங்ரோ ஆற்றைக் கடந்து ஒரு கேந்திர ஸ்தானம் வந்து சேர்ந்தது. மழை இன்னும் கடுமையாகத் தான் இருக்கின்றது. குடியரசு பாஸிஸ்ட் மந்திரி சபை, தம் இத்தாலிய அரசாங்கத்திற்கு, இத்தாலிய சோஷியலிஸ்ட் குடியரசு என்று புதுப் பெயர் கொடுத்திருக்கிறது.

நவம்பர் 26.—5-ம் படைப் போர் முனையில் பீரங்கிப் போர் நடை பெற்றது.

அமெரிக்க 45-வது டிவிஷன் இத்தாலி வந்து சேர்ந்தது.

நவம்பர் 27.—படோக்ளியோ மந்திரி சபையைச் சேர்ந்த, தகவல் மந்திரி விடுத்த அறிக்கையை படோக்ளியோ நிராகரித்தாலல்லது, தாம் தன் பதவிகளை ராஜிநாமா செய்துவிடுவதாக 3 அண்டர் செக்ரடரிகள் அறிவித்திருக்கின்றனர்.

நவம்பர் 28.—படோக்ளியோ மந்திரி சபையார், பாஸிஸ்ட்களை எப்படி நடத்துவது என்பதுபற்றி 6 விஷயங்களைக் கொண்டதோர் திட்டம் வகுத்திருக்கிறார்கள்.

நவம்பர் 29.—சாங்ரோ ஆற்றிற்கு மேலே, நேச நாட்டுப் படைகள் 14 மைல்கள் தூரம் முன்னேறிவிட்டன.

65-வது ஜெர்மன் காலாட் படையோடு 8-ம் படை போராடிக் கொண்டிருக்கிறது.

நவம்பர் 30.—மோஸ்ஸக்ரோக்னு என்னுமிடத்தை ஜெனரல் மாண்ட்காமரியின் படைகள் கைப்பற்றின. காஸில் நோவோ என்னும் முக்கியமான பட்டணத்தை 5-ம் படை கைப்பற்றிக் கொண்டது.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரிகள் வயப்பட்ட நாடுகள்.

நவம்பர் 24.—லெபனுன் தலைவரை ஜெனரல் செட்ராஸ் கண்டு, மீண்டும் லெபனுனில் சட்ட வரம்பிற்குட்பட்ட முறையில் மக்கள் வாழும்படி அனுமதிக்க வேண்டு மென்று, பிரஞ்சு தேசீய மீட்சிக் கமிட்டியார் தீர்மானித்திருப்பதாக, உத்தியோக முறையில் குறிப்பிட்டார்.

லெபனுன் மந்திரிகள் மீண்டும் வேலை செய்யத் தொடங்கி விட்டார்களென்று க்ரான்போர்ன் பிரபு, பிரபுக்கள் சபையில் குறிப்பிட்டார்.

ருமேனியத் தலை நகரத்தையும் மற்ற முக்கியமான நகரங்களையும் காலி செய்து விடுவ தென்று ருமேனிய அரசாங்கம் தீர்மானித்து விட்டது.

பிரெஞ்சு தேசீய மீட்சிக் கமிட்டி தான், உண்மையிலேயே பிரெஞ்சு குடியரசு அரசாங்கம் என்று டி கால் கூறுகிறார்.

நவம்பர் 25.—லெபனுனில் நிலைமை சாதாரணமா யிருக்கிறது. பிரதம மந்திரியும் மற்ற மந்திரிகளும் தம் பதவிகளை ஏற்றுக் கொண்டார்கள். லெபனுன பார்லிமெண்ட் சபை கூடியது.

நவம்பர் 28.—பிரான்ஸைச் சேர்ந்த லியானில், ஜெர்மனியர்களுக்காக நடைபெறும் தொழிற் சாலைகளிலெல்லாம் வேலை நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது.

தம் நாடு சுயேச்சை யடைந்துவிட்டதாக லெபனுன் தலைவரும் முதன் மந்திரியும் பிரகடனம் செய்தார்கள்.

நவம்பர் 29.—விரைவில் பிரான்சுக்கும் லெபனுனுக்கும் சமரசப் பேச்சுக்கள் ஆரம்பமாகு மென்று லெபனுன் பிரதம மந்திரி குறிப்பிட்டார்.

நடு நிலைமை நாடுகள்

நவம்பர் 26.—போர்ச்சுகல் தேசீய அரசாங்க சபையில் பிரதம மந்திரி அன்டோனியா டி ஒலிவீரியாசாலேயை, அசோர்ஸ் ஒப்பந்தத்தைக் குறித்தும், போர்ச்சுகீஸ் டிமியரை ஜப்பானியர்கள் கைப்பற்றிக்கொண்டது பற்றியும் அறிவித்தார்,

நவம்பர் 27.—ஜெர்மனிக்கு விரோதமான நிலைமையில் கொலம்பியா இருப்பதை அங்கீகரிப்பதாக, அந்த அரசாங்க செனட் சபை தீர்மானித்ததாக பகோட்டா செய்தியொன்று கூறியது.

துருக்கியில் பூகம்பம் ஏற்பட்டு ஆயிரக்கணக்கானவர்கள் மாண்டார்கள்.

கீழக் கோடி நாடுகள்.

நவம்பர் 24.—மாக்கினிலுள்ள கில்பெர்ட் தீவை அமெரிக்கப் படைகள் கைப் பற்றிக் கொண்டன. பெட்ரோ தீவில் நேசநாட்டுப் படைகள் இறங்கி அதைக் கைப் பற்றிக் கொண்டன.

பசிபிக் போர்முனையின் நிலைமை பற்றி அட்மிரல் செஸ்டர் நிமிட்ஸ் ஒரு அறிக்கை வெளியிட்டார்.

நியூ பிரிட்டனிலுள்ள காஸ்மதா உள்பட 11 ஸ்தானங்களையும், காவெங்குக்கு அப்பால் 7,000 டன் ஜப்பானியப் போர்க் கப்பல் ஒன்றையும் நேசநாட்டு விமானங்கள் கடுமையாகக் குண்டுகளைக் கொண்டு தாக்கின.

நவம்பர் 25.—வட சாலமன் தீவுகளில் நான்கு ஜப்பானிய நாசகாரிக் கப்பல்கள் மூழ்கடிக்கப் பட்டன ; ஒன்று பழுதாக்கப்பட்டது.

அகஸ்டா விரிகுடாவை யடுத்த காடுகளில், நேசநாட்டுப் படைகள் மேலும் இடங்களைக் கைப் பற்றின.

ஹல்மஹேராவிற்கு அப்பால் ஒரு 8,000 டன் ஜப்பானிய வியாபாரக் கப்பல் மூழ்கடிக்கப் பட்டது.

நவம்பர் 26.—9 எதிரிக் கப்பல்களை அமெரிக்கக் கப்பற் படை மூழ்கடித்தது. சீனுவிற்கு 90 மைல்களுக்குக் கிழக்கிலுள்ள பார்மோசா தீவை, நேசநாட்டு விமானங்கள் தாக்கின. எண்ணெய் சுத்தி செய்யும் தொழிற்சாலைகள் சேத மடைந்தன.

நவம்பர் 27.—புதுகினியைச் சேர்ந்த சாட்டல்பர்க்கை ஆஸ்திரேலியப் படைகள் கைப்பற்றின.

நவம்பர் 29.—மத்திய சீனுவிலுள்ள சாங்டே பகுதியில், சீனர்கள் ஒரு பெரும் வெற்றி பெற்றனர்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.